பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.athayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 21 வியாழக்கிழமை (05.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:099

# மனிதாபிமானப் பேரழிவு கட்டவிழும் பயங்கரமான நிலை வன்னியில்!

## ஐ.நா.மற்றும் ஐ.சி.ஆர்.சி. அதிகாரிகள் அபாயக் குரல்




கோர்டன் வைஸ்

கொழும்பு, மார்ச் 5

வன்னியில் - முல்லைத்தீவில் - மனிதாபிமானப் பேரழிவு கட்டவிழும் நிலை உருவாகி வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பேச்சாளர் கோர்டன் வைஸும்-

தான் சந்தித்த மிகவும் பயங்கரமான மனித நிலைமைகளில் வன்னி மக்களின் இன்றைய நிலையும் ஒன்றாகும்-என்று செஞ் சிலுவைச் சர்வதேசக் குழுவின் தென்னாசிய நடவடிக்கைகளுக்கான பிரதம அதிகாரி ஜக்குவஸ் டி மையோவும்-

அபாய அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்; கவலை தெரிவித்துள்ளனர்.



ஜக்குவஸ் டி மையோ

70,000 முதல் 200,000 வரையான மக்கள் கடல் நீரேரிக்கும் கடற்கரைக்கும் இடையேயான ஒரு சிறிய பிரதேசத்துக்குள் சிக்குண்டுள்ளனர். உணவு, தண்ணீர், தங்குமிடம் என்பன இன்றி மிகமிக கஷ்டப்படுகின்றார்கள் என்று வன்னி நிலையை ஐ.நா. அதிகாரி விவரித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஆறு சதுர கிலோ மைல்களுக்கும் (14 சதுர கிலோ மீற்றர்களுக்கும்) குறைந்த சிறிய இடப்பரப்பில் - கடல் நீரேரிச் சதுப்புக்கும் சமுத்திரத்துக்கும் இடையில் உள்ள குறுகிய மணல் பகுதியில் - சுமார் 100,000 மக்கள் சின்னஞ் சிறிய முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் சிறு பின்னத்துக்கு சமமான அளவிலேயே வழங்கப்படுகின்றன. குடியிருப்பு மற்றும் தண்ணீர்த் தேவைகளும் மிகமிக குறைவாகவே அவர்களுக்கு கிடைக்கின்றன.

உணவு கிடைக்காமையினால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்து விட்டன. மருந்துத் தட்டுப்பாட்டினால் குணமாக்கக் கூடிய நியுமோனியா, (16 ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' ஆசிரியர் கைதான முறை குறித்து ஐ.தே.கட்சியின் எம்.பி. சபையில் காட்டம்

### ஊடக அமைச்சரின் கருத்துக்கும் கண்டனம்

கொழும்பு, மார்ச் 5

இலங்கையில் ஊடகங்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள ஐக்கியத் தேசியக் கட்சியின் எம்.பியான தயாசிறி ஜயசேகர, அந்த அடக்குமுறைகளின் ஒரு பகுதியாக 'சுடர் ஒளி', 'உதயன்' ஆசிரியர் வித்தியாதரன் கைது செய்யப்பட்ட முறை குறித்து தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கக் கோரி லண்டனில் நேற்று ஆர்ப்பாட்டம்!

### நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில்

கொழும்பு, மார்ச் 05

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட்டு அமைதிப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாகும் வரை, இலங்கையை பொதுநலவாய அமைப்பில் இருந்து தடைசெய்ய வேண்டும் - என்று பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் லண்டனில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

லண்டனில் வாழுகின்ற பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பிரிட்டனில் தமிழர்கள் வாழும் தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை தாங்கினார்கள்.

பொதுநலவாய அமைப்பின் அமைச்சர்கள் மட்டத்திலான செயலணிக்குழுவின் மாநாடு இங்கு நடைபெறும் நிலையில், இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள பொதுநலவாய அமைப்பு (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் சண்டை தொடர்கிறது

கொழும்பு, மார்ச் 05

முல்லைத்தீவில் பல முனைகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் தொடர்ந்து கடுஞ் சண்டை நடைபெற்று வருகிறது என தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

இச்சண்டையில் இரு தரப்புகளுக்கும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன என தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

முன்னரங்க நிலையான கேவில் பகுதியில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமாவளவன் கட்சி நிர்வாகியும் தீக்குளித்தார்!

சென்னை, மார்ச் 05

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றக் கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகி ஸ்ரீதர் (வயது -33) நேற்று புதன் கிழமை தீக்குளித்தார் எனக் கூறப்படுகிறது.

புளியந்தோப்பு சரகம் சூளைப் பகுதியைச் சேர்ந்தவர் சதாசிவம். இவரது மகன் ஸ்ரீதர். இவர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் 19ஆவது பிரிவுச் செயலாளராக உள்ளார். இவர் தனது வீட்டில் நேற்று புதன்கிழமை மண்எண்ணை ஊற்றித் தீவைத்துக் கொண்டார்.

இலங்கைத் தமிழரின் அவலங்களைத் தொலைக்காட்சியில் பார்த்த இவர் அந்த மக்களைக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லையே என்று கடந்த சில நாள்களாக பெரும் விரக்தியடைந்து காணப்பட்டார் என்றும் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இவர் தீக்குளித்தார் எனப் பொலிஸார் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் செய்து படுகுழியில் விழத் தயாரில்லை - பிரதமர்

கொழும்பு, மார்ச் 05

இந்த நாட்டில் 30 வருடங்களாக வேரூன்றியிருக்கும் புலிப் பயங்கரவாதம் நாளையோ, நாளை மறுதினமோ அல்லது இன்னும் ஓரிரு நாள்களிலோ முற்றாக அழிந்துவிடும் என்று அரசு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.

புலிகளின் கதை முடியவுள்ள நிலையில் அரசு யுத்தநிறுத்தம் ஒன்றுக்குச் சென்று மீண்டும் படுகுழியில் விழத் தயாரில்லை என்று அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறினார்.



அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்ட இந்நாட்டு மக்கள் யுத்தத்துக்கு முழு ஆதர (15 ஆம் பக்கம் பார்க்க)

Call 110



அவசர அம்புலன்ஸ் சேவைக்கு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால், பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு இச்சேவை வழங்கப்படுகிறது.

அழையுங்கள் 110

Trauma Secretariat UMCOR USAID MEDICAL TEAMS World Health Organization

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொதுநலவாயத்திலிருந்து இலங்கையை இடைநிறுத்த பிரிட்டன் எம்.பிக்கள் ஆதரவு

இலங்கை அரசு யுத்த நிறுத்தமொன்றை ஏற்றுக்கொள்ளும் வரை அதனை பொது நலவாயத்திலிருந்து இடைநிறுத்த வேண்டுமென்ற கோரிக்கைக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் சர்மா விரேந்திரகுமார், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக விவாதிப்பதற்கான பிரேரணையொன்றை (Early Day Motion) சமர்ப்பித்துள்ளார்.

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாகக் கைச்சாத்திட்டுள்ளனர். இந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் வருமாறு:-

இலங்கையில் நெருக்கடிகள் தீவிரமடைகின்றமை குறித்து இந்தச் சபை கவலை கொண்டுள்ளது. ஜனவரி மாதம் மாத்திரம் இரண்டாயிரம் பேர் வரை பலியாகியுள்ளனர்.

மேலும் இந்தச் சபை, மேற்குலக ஊடகங்கள் இந்த விடயத்திற்கு போதிய முக்கியத்துவம் அளிக்காதமை குறித்து கவலை தெரிவிப்பதுடன், உலகத்திற்கு இலங்கையில் என்ன நடைபெறுகின்றது என்பதை தெரிவிக்க ஊடகங்கள் தவறிவிட்டன.

இலங்கை அரசு யுத்த நிறுத்தத்தை ஏற்கும் வரை அதனை பொதுநலவாயத்திலிருந்து இடைநிறுத்தி வைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான கருத்துகளை முன்வைத்தும் அவர்கள் பொதுநலவாயத்திற்குக் கடிதமொன்றை எழுதியுள்ளனர். (அ-சி)


### ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமன விண்ணப்பம் கோரல் - 2009
### சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பிரிவு - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் பின்வரும் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் / மீள் நியமன அடிப்படையில் 2009 ஆம் ஆண்டுக்காலத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வைத்திய உத்தியோகத்தர்.
2. பதிவு வைத்திய உத்தியோகத்தர்/உதவி வைத்திய உத்தியோகத்தர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் ஆவணங்களுடன் 20.03.2009ஆம் திகதிக்கு முன்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதியுடன் 4 நிழற்படப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. ஓய்வூதியக் கொடைப்பத்திரம்.
2. சமாதான நீதிவானின் நற் சான்றிதழ்.
3. யாழ்.மாவட்டத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம்.
4. தற்போதைய உடல், உள நிலை பற்றிய மருத்துவ உத்தியோகத்தரின் சான்றிதழ்.
5. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.
6. 9/2007 சுற்றுநிருபத்திற்கமைய சம்பளம் பெறுவதற்கான விருப்புக் கடிதம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.



### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை விஞ்ஞான ஆசிரியை திருமதி விமலினி இரட்ணவேல் (பட்டு ரீச்சர்) அவர்களின் அன்புத் தாய்

**திருமதி பொன்னையா பாக்கியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நீர்வேலி. (82273) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



### 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 ★ 06 ★ 1942



மறைவு 17 ★ 03 ★ 1997

திதி: நவமி (05.03.2009)

### அமரர் செல்லையா சீவரத்தினம்

ஆருயிர் அப்பாவே
குடும்பத்தின் குலவிளக்கே
அன்புடன் அரவணைத்தே
இதயத்தில் இடம் பிடித்தீர்கள்
இன்னும் நீங்கள் மறையவில்லை
எம்முடன் தான் வாழ்கின்றீர்கள்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.


## சாவகச்சேரி நகர அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 5

சாவகச்சேரி நகரசபையின் நகர அபிவிருத்தி ஆலோசனை சபை உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நகர சபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு வரி மீளாய்வு செய்வது, திட்டமிடல் சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவிருப்பது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (1-207)

## 106 பேர் கொடிகாமம் வந்தடைந்தனர்

யழ்ப்பாணம்,மார்ச் 5

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 106 பேர் நேற்று புதன்கிழமை அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் கொடிகாமம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-207-131)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 5

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான விசேட கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப. 1மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## வீதிக்கு குறுக்கான தடைகள் அகற்றப்பட்டன

குருநகர், மார்ச்.5

யாழ்.காங்கேசன்துறை வீதியில் படையினரின் முகாம்களுக்கு முன்பாக வீதியின் குறுக்காக அமைக்கப்பட்டிருந்த தடைகள் அகற்றப்பட்டு வீதிகளில் எதுவித சிரமமும் இன்றி வாகனங்கள் சென்று வரக்கூடியதாக படையினர் வழி ஏற்படுத்தித் கொடுத்துள்ளார்கள்.

சுன்னாகம், மல்லாகம், கோண்டாவில் ஆகிய இடங்களில் வீதிகளின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த மேடுகளை படையினர் நேற்று புதன்கிழமை வெட்டி வீதியை சீராக்கியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (1-51-160)

## மாநகர சபை பகுதியில் நீர் விநியோகம் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மடத்தடியில் உள்ள பிரதான நீர்த்தாங்கியிலிருந்து இன்றும் நாளையும் நீர் விநியோகம் செய்யப்படமாட்டாது என யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது.

பிரதான நீர்த்தாங்கிக்கு கோண்டாவில் நீர் விநியோக நிலையத்திலிருந்து நீர் விநியோகிக்கும் குழாய் உடைந்துள்ளது. அதனைத் திருத்தும் வேலை நேற்று மாலை தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இதற்கு அதிகாரிகளுடன் 20 தொழிலாளர்கள் கடமை புரிகின்றனர். திருத்த வேலை முடிந்ததும் வழமையான நீர் விநியோகம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மெய்வன்மைப்போட்டி

நயினாதீவு மகா வித்தியாலயத்தில் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் அதிபர் சொ.பகீரதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஜி.வி.இராதகிருஸ்ணனும், சிறப்பு அதிதிகளாக வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன், ஆசிரிய ஆலோசகர் ந.யோகநாதன் மற்றும் கடற்படை முகாம் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (1-267)

* * *

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் (ஆரம்பப்பிரிவு) வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் கலந்து கொள்வார். (1-7)


### தவறிவிட்டது

கிருபாநந்தன் தனபதி, 722400445V, 28B, புதிய சோனகத் தெரு, திருகோணமலை என்னும் முகவரியுடைய சாரதி அனுமதிப் பத்திரம் கடந்த 02.03.2009 அன்று சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை வீதி,கிராம்புவில் சாவகச்சேரி [illegible] 077[illegible] என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.


## வன்னியில் இருந்து வந்தவர்களில் நேற்று வரை 33 பேர் மரணம்

வன்னியில் இருந்து காயமடைந்த நிலையில் திருகோணமலைக்கு கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டவர்களில் நேற்று வரை 33 பேர் மரணமானார்கள் என திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலைக்கு கப்பல் மூலம் வந்தடைந்தவர்களில் 27 பேர் திருமலை வைத்தியசாலையிலும் நால்வர் கண்டி வைத்தியசாலையிலும் இருவர் கந்தளாய் வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (1-151)

## சடலங்களை இனங்காணுமாறு பணிப்பாளர் கோரிக்கை

ஊர்காவற்றுறை மற்றும் சாவகச்சேரி பொலிஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ள சடலங்களை அடையாளம் காண உதவுமாறு யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பெயர் முகவரி எதுவும் தெரியாத நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் 11.01.2009 திகதியில் ஒப்படைக்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலமும் சாவகச்சேரி பொலிசாரினால் 20.02.2009 திகதியில் ஒப்படைக்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலமும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் 11.01.2009 இல் ஒப்படைக்கப்பட்ட ஆண்கள் இருவரின் சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. இதுவரை இச் சடலங்கள் எவராலும் உரிமை கோரப்படவில்லை. எனவே உரித்துடையோர் மூன்று நாள்களுக்குள் அடையாளம் காட்டி இச் சடலங்களை பொறுப்பேற்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் - என்று பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சின்னத்தம்பி (வைத்திலிங்கம் மாஸ்டர்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி 03.03.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியினரின் அன்பு மகனும் அமரர்களான சுந்தையா தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஞானபூரண ரஞ்சிதம், மகேஸ்வரதாசன், கலாநிதி, ஈஸ்வரதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரன் (C.G.R), சுகந்தி, ஞானவேல், கலாமதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காருண்யா, கார்த்திகா, சுமித்திரா, விந்தியா, அபிசன், ருக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை ஊறார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இந்துபாடசாலை வீதி, வல்வெட்டி. சி.மகேஸ்வரதாசன் (அதிபர், யா/சோமஸ்கந்தா கல்லூரி).

### அப்புத்துரை இரத்தினசபாபதி (ரத்தி)



புகையிரத வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட அப்புத்துரை இரத்தினசபாபதி நேற்று (04.03.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் இரத்தினம் தம்பதியின் அன்பு மகனும் சாந்தா (நோர்வே), மணி, ராணி, காலஞ்சென்ற திலகா (இத்தாலி) மற்றும் விஜயகுமார் (ஹொலண்ட்), துரைராஜா (ஹொலண்ட்), சித்திரா, கலா ஆகியோரின் அன்புச் சகோதரரும் உதய மூர்த்தி, தம்பலிங்கம், ஜெயானந்தன், ஜெயராஜா, சாமினா, தவராஜா, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2009) வியாழக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி, கொக்குவில். தகவல்: குடும்பத்தினர்.

### மாரிமுத்து சேனாதிராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் கலட்டி, இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய மாரிமுத்து சேனாதிராஜா நேற்று (04.03.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - செல்லம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் ஜெயந்திரன்(உரிமையாளர், மல்ரிபாம் கலட்டி), ஜெயந்திரா, பிறேமினி(சுவிஸ்), நடனேந்திரன் (பிரான்ஸ்), விஜேந்திரன் (சுவிஸ்), கிருஷ்ணவதனி, அனுசியா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி, ஜெயரெட்ணராஜா (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), சிவகுமார்(சுவிஸ்), சசி (பிரான்ஸ்), அபிராமி(சுவிஸ்), பத்மஸ்ரீ (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரெனின், ரஜீவன், கிருஷிகா, ரதீசன், கஜனுஷிகா, நிவிஷிகா, காயத்திரி, கௌதமி, ஆதவன், அபிராமி, ஆராதனா, அன்ருதி, அன்ருத்திரன், நிருவன், நிவிஷிகா, நிதிஷ், ஆருஷன், அதிசயன், கிருபா, தீபிகா, ஆகியோரின் அன்புப் பேரனும் அன்ருஷனின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.03.2009 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.87, சேர் பொன்.இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
121 4/2, மனிங் பிளேஸ், வெள்ளவத்தை. 0115669008

தகவல்:- ம. ஜெயரெட்ணராஜா (மருமகன்).


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மக்கள் நலனில் நாட்டம் வருமா?

அப்பாடா! பல்கால தாமதத்தின் பின்னர், அரசமைப்புச் சீர்திருத்தச் சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்ற தகவல் வெளிவந்துள்ளது. இந்தத் தகவலை சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கிறார்.

பிரஸ்தாப சபைக்கு நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஐவரின் பெயர்கள் ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து இறுதி முடிவு இம்மாதம் ஒன்பதாம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அரசசேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, லஞ்ச விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றிற்குரிய அங்கத்தவர்களை அரசமைப்புச் சீர்த்திருத்தச் சபையின் பரிந்துரைகளுக்கு அமையவே ஜனாதிபதி நியமிக்க முடியும்.

அரசமைப்புச் சபை ஒன்று நீண்டகாலமாக இயங்காததால், மேற்கூறிய ஆணைக்குழுக்களின் அங்கத்தவர்களை நியமிப்பதில் காலதாமதமும் - இழுத்தடிப்பும் இடம்பெற்று வருகின்றன. மேற்குறிப்பிட்ட முக்கிய ஆணைக்குழுக்களுக்கு அரசாங்கம் தனது ஆதரவாளர்கள், அபிமானிகளையே நியமித்து வருகிறது. அது ஒரு புறமிருக்க, குறிப்பிட்ட பதவிகளுக்கான நியமனங்கள் சட்டத்தின் முன் பெறுமதி இல்லாதவையாக மாறிவிடும் ஆபத்தும் தொடர்கிறது.

தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தல் ஆணையாளரின் பதவி நீடிப்பும் அரசமைப்புச் சபை உரியவாறு இயங்காததால் ஏற்பட்டதன் விளைவே.

மேலும், உயர்நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கு நீதிபதிகளை நியமித்தல், நீதிச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் , கணக்காய்வாளர் நாயகம் போன்ற பதவிகளுக்கு உரிய நியமனங்களும் அரசமைப்புச் சபையின் ஒப்புதலுடனேயே ஜனாதிபதியால் செய்யமுடியும்.

ஆனால், நீண்ட காலமாகவே அரசமைப்புச் சீர்திருத்தச் சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு அது உரிய முறையில் இயங்காததால் பல நிர்வாக நடவடிக்கைகள் கேள்விக்குரியனவாக மாறியுள்ளன.

அரச நிர்வாகத்துறைக்கு முக்கியத்துவம் வாய்ந்த அரசமைப்புச் சீர்திருத்தச் சபை இயங்காமல் இருந்தமைக்கான காரணம் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றல்ல. இந்த நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடமே குவிந்துகிடக்கிறது. அந்த நிறைவேற்று அதிகாரம் அளவுக்கு அதிகமாகத் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் முக்கிய நியமனங்களிலேனும் கண்காணிக்கப்படவேண்டும் என்பதற்காகவே அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது சரத்தின் கீழ் அரசமைப்புச் சீர்திருத்தச் சபை ஒன்றை நிறுவ ஏற்பாடாகியது.

சந்திரிகா காலத்திலேயே இச்சபை நிறுவப்பட்டாலும் அது உரியவாறு இயங்கியதாக இல்லை. இப்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்தபின்னர் அது கிடப்பில் போடப்பட்ட ஒன்றாகிவிட்டது. இப்போதும் பேராசிரியர் சுமணஸ்ரீ ஜெயகே உள்ளிட்ட சிலரால் அரசமைப்புச் சீர்த்திருத்தச் சபை விவகாரம் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாலேயே சிறு வெளிச்சம் தெரிகிறது. பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரினதும் இணக்கத்துடனேயே ஐவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமாஅதிபர் தெரிவித்திருக்கிறார்.

நாட்டு நிர்வாகத்தில் நிறைவேற்று அதிகாரம் தான்தோன்றித்தனமாகி விடக்கூடாது என்பதற்காகவே, அரசமைப்புச் சீர்திருத்தச் சபை உருவாக்கப்பட்டது. ஆனால், அந்த நோக்கம் நிறைவேறுவதாக இல்லை.

இப்போது ஜனாதிபதியாகப் பதவி வகிப்பவரும் முந்தியவரின் முன்னுதாரணத்தை கையில் ஏந்தி நிற்பதால், இந்த நாட்டில் ஜனநாயகம் என்பது கேலிக்குரிய ஒன்றாக மாறிவிடும் நிலை உருவெடுத்து வருகிறது.

இந்தக் கட்டத்திலாவது ஜனநாயகத்தின் மீது பற்றுக்கொண்ட சிலர் இதுவிடயத்தில் நீதிமன்றத்தின் உதவியை நாடினர். அது நல்ல பெறுபேற்றினைத் தரும் என்று எதிர்பார்க்கலாமா?

நாட்டின் அரசியல், நிர்வாகம், நிறைவேற்று அதிகாரம் என்று பல பீடங்களிலும் அமர்ந்திருப்பவர்கள் மக்கள் நலனைப் புறந்தள்ளி தமது சொந்த நலனுக்காக, சுய விருப்பு வெறுப்புகளுக்காக செயற்படுவதிலேயே முழு நாட்டத்தையும் காட்டி வருவதால், நீதிமன்றத்தின் உத்தரவும் கிடப்பில் போடப்படுமோ என்ற அச்சம் நாட்டு மக்களுக்கு எழுவது இயல்பே; தவிர்க்க முடியாததும் ஆகும்.

# யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 15ஆயிரம் மிதிவெடிகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 5,

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினால் கடந்த ஆண்டு 15ஆயிரத்து 306 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி எஸ். டெனிஷன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2008ஆம் ஆண்டு குடாநாட்டில் 'ஹலோரஸ்ட்', 'டெனிஸ்' ஆகிய மிதிவெடி அகற்றும் நிறுவனங்கள் பணிகளை முன்னெடுத்தன.

இதன் அடிப்படையில் 'டெனிஸ்' மிதிவெடியகற்றும் நிறுவனம் குடாநாட்டில் 10 லட்சத்து 74 ஆயிரத்து 137 சதுர மீற்றர் நிலப்பரப்பில் 714 மனித எதிர்ப்பு மிதி வெடிகளையும், 04 வாகன எதிர்ப்பு மிதிவெடிகளையும் 5ஆயித்து 182 வெடிக்காத வெடி பொருள்களையும் அகற்றியுள்ளது. மொத்தமாக 5 ஆயிரத்து 900 வெடி பொருள்களை இந்த நிறுவனம் அகற்றியது.

'ஹலோரஸ்ட்' நிறுவனம் குடாநாட்டில் 3 லட்சத்து 996 சதுர மீற்றர் நிலப் பரப்பில் 548 மனித எதிர்ப்பு மிதி வெடிகளையும், 8 ஆயி ரத்து 852 வெடிக்காத வெடிபொருள் களையும் அகற்றியுள்ளது. மொத்தம் 9ஆயிரத்து 406 வெடிபொருள்கள் இந்த நிறுவத்தினால் அகற்றப்பட்டுள்ளன.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்கள் யாவும் 'ஹலோரஸ்ட்', 'டெனிஸ்' ஆகிய நிறுவனங்களினால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன - என்றார். (50-9)



நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு விநாயகரின் 32 அவதாரங்களும் சிற்பமாக வடிக்கப்பட்டு நயினாதீவு பக்தர்களால் வழங்கப்பட்டுள்ளன.

ஆலய உள்வீதியில் இந்த 32 சிற்பங்களும் வைத்து வழிபடப்படவுள்ளன.

ஆலய உள்வீதியில் இவை வைக்கப்பட்ட பின்னர் திறந்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக 32 அவதார சிலைகளுடன் நயினாதீவு ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாராசா, வீரகத்தி விநாயகர் ஆலயத் தலைவர் ந.விஸ்வநாதன், செயலாளர் நா.கணேஷ் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## சின்னம் சூட்டும் விழா

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர் தலைவர் நியமனம் வழங்கலும், சின்னஞ்சூட்டும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ் லாஸ் பிரதம விருந்தினராகவும் காரைநகர் சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் ப.ஐங்கரன் மற்றும் இளைப்பாறிய ஆசிரியை செல்வி அ.வைரமுத்து ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (50-267)

# யாழ்.மாவட்ட சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் 14ஆயிரம் பேர் இணைவு

யாழ்ப்பாணம்,மார்ச் 5

யாழ்.மாவட்ட சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் 17ஆயிரம் பயனாளிகள் இதுவரை இணைந்துள்ளனர்.

சமூகப் பாதுகாப்புச் சபையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி மா.பிரதீபன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை அரசினால் 1996ஆம் ஆண்டு சமூகப் பாகாப்புச் சபையின் சுய தொழில் ஓய்வூதியத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

முதன்முறையாக யாழ். மாவட்டத்தில் 1999ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து 2006ஆம் ஆண்டு முற்பகுதி வரை 877 பயனாளிகள்மட்டுமே இணைந்து கொண்டார் கள்.

அக்காலப் பகுதியில் யாழ். மாவட்ட சமூகப் பாதுகாப்புச் சபை மந்த கதியில் செயற்பட்டது.

பின்னர் 2006ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் 1039 பேரும், 2007ஆம் ஆண்டு 2ஆயிரத்து 374 பேரும் 2008 ஆம் ஆண்டு 14ஆயிரத்து 849 பேரும் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டனர்.

பயனாளிகள் மத்தியில் சமூகப் பாதுகாப்புச் சபை ஓய்வூதியத்திட்டத்தின் பலாபலன்களை வெளிப்படுத்தத் தொடங்கியதையடுத்து மக்கள் தாமாகவே முன்வந்து இத்திட்டத்தில் இணைந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் 3ஆயிரம் பயனாளிகள் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர் -என்றார். (50-9)

# வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் 355 'கோப் சிற்றி'கள் அமைக்கப்படும்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

வடக்கு, கிழக்கில் 355 'கோப் சிற்றி'கள் அமைக்கப்படவுள்ளன. கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றியதன் பின்னர் அங்கும் ஒரு 'கோப் சிற்றி' திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளுக்காக 300 மில்லியன் ரூபா வரை வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:

உலகில் இன்று நிலவிவரும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் போட்டிகளுக்கும் மத்தியில் நமக்கென ஒரு சந்தை வாய்ப்பைப் பெறுவது அவசியமாகவுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கத் துறையின் அபிவிருத்தி முக்கியமானது. அதுமட்டுமன்றி அரச துறையினரின் அபிவிருத்தியை மேம்படுத்த பல பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியம்.

மத்திய நிலையங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பதுளை, தம்புள்ள, நுவரெலியா, எம்பிலிப்பிட்டிய, மீகொட போன்ற இடங்களைக் குறிப்பிடலாம்.

முன்னர் 'சதொச' முக்கியமான தொரு நிறுவனமாக விளங்கியது. லலித் அத்துலத் முதலியின் காலத்தில் சதொச மோட்டர்ஸ் போன்றவை ஆரம்பிக்கப்பட்டன, பின்னர் அந்நிறுவனம் திடீரென வீழ்ந்தது.

தற்போது அது 'லக்சதொச' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் வவுனியா உட்பட ஒரு லட்சத்து 102 'லக்சதொச' நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்று மரக்கறி உற்பத்தியாளர்கள், பழ உற்பத்தியாளர்கள், சிறுகைத் தொழில் உற்பத்தியாளர்கள் போன்றோர் கொழும்புச் சந்தையில் நுழையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் பலனாக வடக்கு, கிழக்கில் 355 'கோப் சிற்றி'கள் அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றியதன் பின்னர் அங்கும் ஒரு 'கோப் சிற்றி' திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளுக்காக 300 மில்லியன் ரூபா வரை வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேச மட்டத்தில் பல கோப்சிற்றிகள் எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ளன என்றார்.

| நாளை | |
|---|---|
| மாசி 22 | 06.03.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | தசமி |
| | மாலை 06.18 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | பி.ப. 02.44 வரை |
| சுபநேரம்: | 06.25 - 07.55 |
| ராகுகாலம்: | 10.55 - 12.25 |

# வலிகாமம் வலயத்தில் 16 மாணவர்கள் 'அருணலு' திட்டத்தில் கௌரவிக்கப்படுவர்

## சுன்னாகம் கொமர்ஷல் வங்கியில் அடுத்த வாரம் நடைபெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 5

வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களில் 16 மாணவர்கள் கொமர்ஷல் வங்கியின் சுன்னாகம் கிளையினால் கௌரவிக்கப்படவுள்ளனர். எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை இந்த நிகழ்வு வங்கி மண்டபத்தில் நடைபெறும்.

பரீட்சையில் சித்திபெற்ற வங்கியில் கணக்கு வைத்துள்ள மாணவர் களே 'அருணலு' புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே 10,000 ரூபா, 7,500 ரூபா, 5,000 ரூபா வீதம் கணக்கில் வைப்பிலிடப்படவுள்ளது. இந்த வகையில் 16 மாணவர் களுக்கும் 127,500 ரூபா வழங்கப்படவுள்ளதாக கிளை முகாமையாளர் இ. குலேந்திரன் தெரிவித்துள்ளார்.

வலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட 16 மாணவர்களுக்கு 'அருணலு' புலமைப்பரிசில் நிதி வழங்கப்படவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் ஆகாஷ்

பத்தானை, அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த புவனதாஸ் - குகாஜினி தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஆகாஷ் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (05.03.2009) வியாழக்கிழமை கொண்டாடுகிறார். இவரை மாலிசந்தி விநாயகர் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அம்மம்மா, மாமாமார்.

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, மார்ச் 5

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* ஆனைக்கோட்டை காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அணி.
* ஆனைக்கோட்டை சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகம் எதிர் அராலி பாரதி விளையாட்டுக் கழகம்.

(50-86)

* * *

வலி.வடக்கு, மார்ச் 5

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு கரவெட்டி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம்.
* வல்வெட்டித்துறை ஆதிபரா சக்தி விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகம்.

(50-86)

# கண்ணீர் அஞ்சலி



பிரம்மஸ்ரீ

## தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள்

01.03.2009இல் ரவி ஐயா அமரரான செய்தி கேட்டு நம் ஆலயமே அதிர்ந்தது. மனிதநேயத்தை மாண்புடன் வெளிப்படுத்திய மனிதமாணிக்கம் நம் ரவி ஐயா. பேச்சில் இனிமை, செயலில் பரோபகாரம் உள்ளத்தால் பொய்யாதொழுகும் கள்ளங் கபடமற்ற புனிதர் நம் அமரர். அடியார் துயர்துடைக்க அம்பிகையைக் கெஞ்சி வேண்டுதல் செய்யும் மாண்பு ஐயையோ! எங்கு இனிக்கேட்போம் அவர்தம் இனிய ஆறுதல் வார்த்தைகளை நாடிச் சென்று உதவி கேட்கும் போதெல்லாம் ஓடி வந்து அம்பிகையின் கிரியைகளை முடித்துத்தந்த ரவி ஐயா அமரரானார். அமரரின் குடும்பத்தினர் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அவர்தம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாகிகள்,

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

(சி/556040)

# மரண அறிவித்தல்

## சிமியோன் மேரி மாட்டீன்



குருநகர், கடற்கரை வீதியைப் பிறப்பிடமாகவும், புனித பத்திரிசிரியார் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது சென்னை, மடிப்பாக்கத்தில் வசித்து வந்தவருமான சிமியோன் மேரி மாட்டீன் நேற்று (04.03.2009) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றெஜீனா (றோஸ்மலர்) அவர்களின் அன்புக் கணவரும் ஜோசப் ம[illegible]யமான் (நோர்வே), கிளிட்டஸ் சேரமான் (கனடா), செப்பேட் வேள்மான் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்ரோறியா (புவனேஸ்), அனுசியா, சேளிதர்மினி ஆகியோரின் மாமனாரும் ஜோசபீனின் (குலம்) அன்புச் சகோதரனும் வேதநாயகத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேர்த்தி (பிரியா).
தொ.பே: 021 222 3201

இல.50, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்

Prima Chicken பாவனையாளர்களுக்கு ஈஸ்ரர் பெருநாளை முன்னிட்டு அறிமுகம் செய்யும்

## அதிரடி வியாபாரக்கழிவு நடவடிக்கை



ஏற்கனவே நடைமுறையிலுள்ள
விலைக்கழிவு நடைமுறை தொடர்ந்தும்
பேணப்பட்டு வருகின்றது.
இதற்கு மேலதிகமாக,

ஈஸ்ரர் பெருநாள் காலங்களில் ...
3 பொதி Prima whole chicken
ஒரே தடவையில்
கொள்வனவு செய்கின்ற
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும்



**¼ Kg Prima Chicken Gizzard**

இலவசமாக வழங்கப்படும்

இன்று தொடக்கம் .....

# Congratulations!



Isles International University

CERTIFICATE OF AFFILIATION

awarded to

NORTH LANKA INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

As the


PARTNER INSTITUTION
(in JAFFNA, SRI LANKA)

North Lanka IIT under the leadership of S.A. Balasubramaniam (Director) can recruit centres in the stated region, to promote, coordinate and run programmes validated by Isles International University (Commonwealth).

Issued on 23 February 2009 under License Number: IIU/AF-SL/09-2001

Valid until 31 December 2011

Executive President
Governing Council



**S.A.Balasubramaniam**
**Rector**
**North Lanka IIT**
**Isles International University**
**(Commonwealth) இனது**
**Sri Lankan Representative**
**ஆகவும்**
**North Lanka IIT**
**PARTNER INSTITUTION**
**ஆகவும்**
**Isles International University**
**இனால் நியமிக்கப்பட்டமையையிட்டு**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்!**

**North Lanka IIT சமூகம்**
**&**
**NOTTINGHAM COLLEGE OF LONDON**
**(Partner Institution of NLIIT in Colombo)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகத்திற்கு வடிகாலமைப்புச் சபை 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மார்ச்5

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இந்த ஆண்டு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்கென 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தற்போது இந்த நிதி வந்து சேர்ந்ததையடுத்து முதற்கட்டமாக வடமராட்சிப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகப் பணிகள் விஸ்தரிக்கப்படவுள்ளன.

இதற்கென தம்பசிட்டி மாயக்கைப் பகுதியில் தண்ணீர் மட்டம் குறையாத நிலையிலுள்ள கிணறு ஒன்று புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இக்கிணறு மூலம் பல பிரதேசங்களுக்குக் குழாய் வசதியுடன் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனைவிட வலி.கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியிலும் இந்த ஆண்டில் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## 'பழுது நோயால்' தடைப்படும் குமுதினியின் படகுச் சேவை

நல்லூர்,மார்ச்5

நெடுந்தீவு கடல்வழிப் போக்குவரத்திலுள்ள அரச படகு 'குமுதினி' மீண்டும் பழுதடைந்துள்ளது.

இந்தப் படகு அடிக்கடி பழுதடைவதும் திருத்தவேலைகளை மேற்கொண்டு சேவைக்குத் திரும்புவதுமாக உள்ளது.

திருத்த வேலைகள் மேற்கொண்டாலும் ஒரு மாத காலத்தினுள் மீண்டும் குமு தினி பழுதடைகின்றது.

64 வயதுக்கு மேற்பட்ட குமுதினிக்கு அடிக்கடி ஏற்படும் ''பழுதுநோய்''க்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுவதில்லை எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (203-111)

## யாழ்.நகரில் உள்ள பிரதான வீதிகளில் வேகத்தடைகள் நேற்று அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,மார்ச்5

யாழ்.நகரில் உள்ள பிரதான வீதிகளில் போடப்பட்டிருந்த வேகத் தடைகள் நேற்றுப் படையினரால் அகற்றப்பட்டன.

இராணுவ காவலரண்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு முன்பாக இந்த வேகத் தடைகள் அதிகம் அமைக்கப்பட்டிருந்தன.

குறுக்கே போடப்பட்டிருந்த வேகத் தடைகளை அகற்றும் பணியில் படையினர் நேற்று ஈடுபட்டனர்.

கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி சந்திப் பகுதி மற்றும் சத்திரச் சந்தி போன்ற பகுதிகளில் போடப்பட்ட வேகத்தடைகளே இவ்வாறு அகற்றப்பட்டன. (203-224)

## நெடுந்தீவில் அமைக்கப்படும் வீடுகளின் வேலைகளைப் பூர்த்திசெய்யுமாறு அறிவுறுத்து

நெடுந்தீவு,மார்ச்5

நெடுந்தீவில் வீட்டுத்திட்டங்களின் கீழ் கட்டி முடிக்கப்படாத நிலையில் உள்ள வீடுகளின் வேலைகளை விரைவில் பூர்த்திசெய்யுமாறு யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்திருந்த அரச அதிபர், அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்பட்டு வரும் வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

வீடுகளின் கட்டட வேலைகள் பூர்த்தி அடையாத நிலையில் உள்ளமையால் அவற்றை விரைவில் பூர்த்திசெய்யுமாறு அரச அதிபர் நிறுவனங்களுக்கு இந்த அறிவுறுத்தலை விடுத்தார். (203-111)

## வழிகாட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மார்ச்5

மத்திய - மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை நிர்வாக சேவையின் பதவியுயர்வுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இந்த வகுப்புகள் வார இறுதிநாள்களில் இடம்பெறவுள்ளன. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)

## வெள்ளோட்ட விழா

கொழும்புத்துறை,மார்ச்5

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா எதிர்வரும் மே மாதம் அளவில் இடம்பெறவுள்ளது 'என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (203-224)

## கிணறுகளை இறைப்பதற்கான விண்ணப்பங்கள் அதிகரிக்கின்றன

நல்லூர்,மார்ச்5

'நிஷா' வெள்ள அனர்த்தத்தினால் மாசடைந்த குடிதண்ணீர் கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்வதில் பொதுமக்கள் கூடுதல் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

தினமும் இதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மாநகர சபைக்கு வந்தவண்ணம் உள்ளன எனவும் இதுவரை ஆயிரத்து 200 கிணறுகள் மாநகர சபையால் இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டுள்ளன எனவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். (203-111)

## நலிவுற்ற குடும்பங்களுக்கான நிவாரணம்; பெப்ரவரி மாதத்திற்கான விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

நலிவுற்ற குடும்பத்தினருக்கான பெப்ரவரி மாதத்திற்கான இலவச உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கும் பணிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிவாரணத்திற்கு அரிசி, மா, பருப்பு, சமையல் எண்ணெய், சீனி போன்ற பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாரண விநியோகம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. 17ஆம் திகதி வரை இந்த விநியோகம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. விநியோகம் செய்யப்படும் பொருள்களின் விவரம் வருமாறு:

| | அங்கத்தவர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| பொருள் | 1அங். | 2அங். | 3அங். | 4அங். | 5அங். அதற்கு மேல் |
| அரிசி | 2.800 | 5.600 | 8.400 | 11.200 | 14.000 |
| மா | 8.400 | 16.800 | 25.200 | 33.600 | 42.000 |
| பருப்பு | 1.680 | 3.360 | 5.040 | 6.720 | 8.400 |
| எண்ணெய் | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 |
| சீனி | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 |

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களை அடுத்த வாரமளவில் பாடசாலையில் இணைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்5

மிருசுவில், கொடிகாமம் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களை அடுத்தவாரம் தொடக்கம் பாடசாலையில் இணைப்பதற்குரிய ஏற்பாடுகளை உரிய அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்கள் கொடிகாமம் அ.த.க. பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கப்படவுள்ளனர்.

இதற்கென கொடிகாமம் அ.த.க. பாடசாலை வளாகத்தில் 'யுனிசெப்' நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டுவரும் தற்காலிக வகுப்பறைகளில் பாடசாலை மாணவர்களுடன் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களும் இணைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை - நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தரம் 12, 13 ஆகிய வகுப்பு மாணவர்களையும் வேறு பாடசாலைகளில் இணைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (203-207)




## தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்குக் கணனிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்.5

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு மாகாண கல்வி அமைச்சினால் 61 கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டுக்கான சீ.எம்.பி. திட்டத்தின் கீழ் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு 23 கணனிகளும், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் ம.வி. ஆகியவற்றுக்கு தலா 13 கணனிகளும் வழங்கப்பட்டுள்ளன.

2008ஆம் ஆண்டுக்கான ஈ.கே.எஸ்.பி. திட்டத்தின்கீழ் மீசாலை விக்னேஸ்வரா ம.விக்கு 9 கணனிகளும் ஈ.எஸ்.டி.பி. திட்டத்தின்கீழ் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு 3 கணனிகளும், தொலைக்காட்சிப்பெட்டியொன்றும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி,மார்ச்5

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'இலக்கியம் காட்டும் வாழ்க்கை நெறி' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவன் ரி.ஹர்ஷன் சொற்பொழிவை நிகழ்த்துவார். (203-236)

## யாழ்.பல நோ.கூட்டுறவுச் சங்கத்தில் கடன்திட்டம் முதலாம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

அரச பணியாளர்களின் வசதி கருதி யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிதாக அறிமுகம் செய்யும் இலகு முறையிலான கடன்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்று சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் வங்கிப் பணியாளர்கள் ஆகியோர் சங்கத்தின் இந்த இலகு கடன் வசதி மூலம் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியும்.'

கடந்த முதலாம் திகதி தொடக்கம் சங்கத்தின் இந்தப் புதிய திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அரச பணியாளர்கள் தமது நிறுவனத் தலைவரின் சிபார்சுக் கடிதத்துடன் இந்த இலகு கடன் திட்டத்தில் இணைந்துகொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## குருநகர், கொட்டடி மீன் சந்தைகளில் குளிரூட்டப்பட்ட மீன்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்5

குருநகர், கொட்டடி மீன் சந்தைகளில் குளிரூட்டப்பட்ட மீன்களே அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தைகளில் மாலைநேரங்களில் அதிகளவில் வந்து சேரும் மீன்களை வியாபாரிகள் குளிரூட்டியில் வைத்து மறுநாள் விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு குளிரூட்டப்பட்ட மீன்களை நண்பகல் வரை வைத்து விற்பனை செய்து வருவதால் அவை பழுதடைந்து விடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (203-224)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் 2009ஆம் ஆண்டுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான 7 மாணவர்களுக்குமான ஆங்கில அகராதிகளை இலங்கை வங்கியின் இளநிலை அதிகாரி த.கணேசமூர்த்தி மருதங்கேணிப் பிரதேச செயலக ஊழியரிடம் வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம். ஆச்சிரமத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் போட்டியில் வெற்றிபெற்ற வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை மாணவர்களுக்கானப் பரிசில்களைப் பாடசாலை அதிபர் கி.இராஜதுரையிடம் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.குமாரவேல் வழங்குவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

ஞானச்சுடரின் [illegible]ஆவது இதழின் சிறப்புப் பிரதியை வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனிடம் இருந்து மகாராணி புடைவை நிலைய உரிமையாளர் க.சோமசேகரம் பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பியது இலங்கைக் கிரிக்கெட் அணி உறவினர்கள் கண்ணீர் மல்க வரவேற்றனர்



விமான நிலையத்தில் மனைவியுடன் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன......



அணியின் உப தலைவர் குமார் சங்கக்கார மனைவியுடன்......



நவலோக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் திலான் சமரவீர மனைவி, பிள்ளையுடன்.....



கையில் காயமடைந்த அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளர் போல் பாபரஸ்......



மனைவியுடன் முத்தையா முரளிதரன்......




பயங்கரத்தை ஊடகங்களுக்கு விவரிக்கும் மஹேல ஜெயவர்த்தன.



பெற்றோருடன் பரண விதாரண......



குடும்பத்தினருடன் அஜந்த மெண்டிஸ்.....



திலகரட்ண டில்ஷான் மனைவி, பிள்ளை யுடன்......



பிள்ளையைக் கையில் ஏந்திவாறு டில்காரா பெர்னான்டோ.....




தாக்குதலுக்கு இலக்கான பஸ்ஸை பாகிஸ்தான் அணித் தலைவர் யூனிஸ்கான் பார்வையிடுகின்றார்.



தாக்குதல் நடந்தவேளை பதிவான காட்சி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு நாடுகள் மாதிரியில் உருவாக்கப்படும் மூத்த பிரஜைகள் பேரவை

மூத்த பிரஜைகள் பேரவை என்ற பெயரில் எதிர்வரும் 10ஆம் திகதி புதிய அமைப்பொன்று உருவாக்கப் படவிருக்கின்றது. இந்த அமைப்பின் செயற்பாடுகள் பற்றி இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அங்குரார்ப்பணமாகும் யாழ்.மாவட்ட மூத்தபிரஜைகள் பேரவை என்ற அமைப்பு மாவட்டத்துக்கு மாத்திரமல்ல அகில இலங்கைக்கும் ஒரு முன்மாதிரியான திட்டமாகும். மேலை நாடுகளில் சிறப்பாகச் செயற்பட்டுவரும் இத்தகைய அமைப்புகளின் பணிகளால் ஈர்க்கப்பட்ட எமது பிராந்திய ஆணையாளர் திருமதி பு.சிவலிங்கம் அவர்களது உள்ளத்தில் உருவான இந்த அமைப்பை அவரது எண்ணக்கரு எனக் கூறினால் மிகையாகாது.

மேலைநாடுகளில் முதியவர்களுக்கு அளிக்கப்படும் கௌரவத்தை அங்கு சென்று நேரடியாகக் கண்டுணர்ந்தவர்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. "Senior Citizen" என அழைக்கப்படும் முதியவர்களுக்கு அரசாங்கம் செய்யும் உதவிகள் அளப்பரியன. அரசாங்கம் மாத்திரமல்ல சாதாரண பிரஜைகளும் கூட அவர்களுக்கு மிக்க மரியாதை கொடுத்து கண்ணியமாக நடத்துகிறார்கள். ஆனால் எமது நாட்டில் முதியவர்கள் குடும்பத்துக்கு ஒரு "சுமை" என்ற மனோபாவம் இன்றும் மாறியதாகத் தெரியவில்லை.

### சமரச அமைப்பு

மேற்குலக நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்றவர்கள் தத்தமது பெற்றோர்களைப் பராமரிப்பதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். பொருளாதாரம் உட்பட பல வகையான வசதிகள் இருந்தும் கூட அத்தகையவர்களது முதிய பெற்றோர்கள் தகுந்த பராமரிப்பு வசதிகள் இன்றிப் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

## மார்ச் 10 ஆம் திகதி அங்குரார்ப்பணம்

இவற்றையெல்லாம் உன்னி உணர்ந்ததின் பயனாக ஆணையாளரின் சிந்தனையில் உருவானதுதான் இந்த அமைப்பு. இந்த அமைப்பு முற்று முழுதாக சாதி, மத, இன, மொழி வேறுபாடற்ற ஒரு சமரச அமைப்பாகவே விளங்கும்.

ஆணையாளரது சிந்தனையில் உருவான திட்டத்துக்கு உருக்கொடுத்து அலுவலகக் கட்டடம் உட்பட சகல தேவைகளையும் ஆணையாளரின் அனுசரணையுடன் நிறைவேற்ற அல்லும் பகலும் உழைத்து வரும் திட்ட அமைப்பாளர் க.கிருபாகரன், மாவட்ட உத்தியோகத்தர் ஞானவேல் மற்றும் ஆணையாளரது அலுவலகப் பணியாளர்கள் ஆகியோரது தன்னலமற்ற சேவை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறற்பாலது. வடக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்கள பணிப்பாளர் எஸ்.ஜே.அருள்ராஜின் பங்களிப்பும் மகத்தானது.

பாரிய தூர நோக்கைக் கொண்ட இத்திட்டம் வெற்றிகரமாக முன்னேறி மூத்த பிரஜைகளுக்கு ஒரு கற்பகவிருட்சமாக விளங்க ஊடகங்கள், செயலகங்கள், சன சமூக நிலையங்கள், அறங்காவல் அமைப்புகள், நிறுவனங்கள், தொடர்பு சாதனங்கள் போன்றன முழு ஆதரவையும் வழங்கி வரும் என எதிர்பார்க்கின்றோம். இதைத் தவிர சுகாதாரப் பகுதி, மருத்துவ தாபனங்கள், போக்குவரத்துப் பகுதி முதலியனவற்றுடன் தொடர்புகொண்டு அவற்றின் உதவிகள் தேவைப்படும் காலங்களில் பெற்றுக் கொள்வதற்கான திட்டமும் ஆலோசனையில் உள்ளது.

நடைமுறைகள் சாத்தியமான அளவுக்கு மூத்த பிரஜைகளின்தேவைகளை அறி தேவையான நடவடிக்கைகளை எடுத்த அவர்களது பட்டறிவைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தல், இளைய தலைமுறையினருக்கு ஆங்கிலக்கல்வி, கணனிப் பயிற்சி, தையல் பயிற்சி முதலியவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தல், சிறிய கைத்தொழில்களில் மூத்த பிரஜைகளை ஈடுபடுத்தி அவர்களது ஓய்வுநேரத்தைப் பயனுள்ளதாக்கல் போன்ற பல திட்டங்கள் ஆலோசனையில் உள்ளன. இதற்கு சமூக சேவை உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள் ஆகியோர் சமூகசேவை அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

### தொண்டர் சேவை

குடும்பத்துடன் வசிக்கும் மூத்த பிரஜைகளது நலன்களைக் கண்காணித்து உதவுவதற்கெனத் தொண்டர் குழுக்களை அமைத்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அளித்து அவர்களது சேவைகளைப் பெறும் முகமாகப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு கணிசமான அளவினர்களுக்குப் பயிற்சி அளித்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த தொண்டர் சேவையை கணிசமான கட்டணத்தில் எம்முடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**லயன் வல்லிபுரம் பரமசிவம்,**
**செயலாளர்.**

# நோர்வேயில் இன்று மனித சங்கிலிப் போராட்டம்

கொழும்பு,மார்ச்5

வன்னிப் பிரதேசத்திற்குள் வாழும் மக்களுக்கான உணவு, மருந்துப் பொருள்கள் உடனடியாக அவர்கள் வாழும் பகுதிக்கு அனுப்பப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒஸ்லோ மத்திய ரயில் நிலைய வளாகத்தில் இருந்து இன்று வியாழக்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை மனித சங்கிலியாக மக்கள் அணிதிரளும் போராட்டமாக இதனை முன்னெடுக்கவுள்ளதாக நோர்வே தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இப்போராட்டம் தொடர்பாக நோர்வே தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெறும் போரினால், உணவின்றி, மருந்தின்றி, குடிதண்ணீர் கூட இன்றி, வார்த்தைகளால் எடுத்துரைக்கமுடியாத ஒரு பெரும் மனித அவலத்திற்குள், மரணக்களத்திற்குள் வாழ எமது உறவுகள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர்.

பசியினாலும், நோய்களுக்கும் காயங்களுக்கும் மருந்தின்றியும் உயிரிழக்கின்ற பேரவலம் எமது உறவுகளைச் சூழ்ந்துள்ளது.

எமது உறவுகளை அவர்களின் சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றி, வதை முகாம்களுக்கு அனுப்பப்படுவதை, இன அழிப்பு செய்வோரின் கைகளில் ஒப்படைக்கப்படுவதனை அனுமதிக்கமாட்டோம் - வன்னிப் பிரதேசத்திற்குள் வாழும் மக்களுக்கான உணவு, மருந்துப் பொருள்கள் உடனடியாக அவர்கள் வாழும் பகுதிக்கு அனுப்பப்படவேண்டும். என்பதை வலியுறுத்தி இந்த மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

நோர்வே வாழ் தமிழீழ மக்களே, இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் நாம் அனைவரும் ஆயிரமாய் அணிதிரள்வதன் ஊடாக எங்கள் உறவுகளைப் பட்டினிச் சாவில் இருந்து தடுக்குமாறும், உணவு மருந்துப் பொருள்களை அனுப்புமாறும் ஒருமித்த குரலில் நோர்வே அரசிற்கும், நோர்வேஜிய உதவி நிறுவனங்களுக்கும் அழுத்தம் கொடுப்போம் என நோர்வே தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (சி)

## வெல்லாவெளி - மண்டூர் வீதியில் கிளைமோர் தாக்குதல்

மட்டக்களப்பு,மார்ச்5

மட்டக்களப்பு, வெல்லாவெளி, மண்டூர் வீதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.10 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த இருவரும் பொலிஸார் ஒருவரும் படுகாயமடைந்தனர் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. (சி)

# சர்வதேச விதிமுறைகளுக்கு அமையவே படையினர் மோதலில் ஈடுபட்டுள்ளனர்

## மனித உரிமைகள் விவகார அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,மார்ச் 5

சர்வதேச யுத்த விதிகளுக்கு அமையவே எமது படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரிட்டு வருகின்றனர் என மனித உரிமைகள் விவகார அமைச்சர் மஹிந்த சமரசிங்க கடந்த திங்கட்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்தார்.

போர் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்கள் மீது விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் அங்கு குற்றஞ் சாட்டினார்.

எமது படையினருக்கு இழப்புகள் அதிகரித்தபோதிலும் அவர்கள் பலத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டே போரிட்டு வருகின்றனர் என்று கூறியுள்ளார்.

சுமார் 25 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குள்ளேயே விடுதலைப் புலிகள் கட்டுப்பட்டுள்ளனர். எனவே அங்குள்ள மக்கள் தப்பிச் செல்வதைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்றும் அமைச்சர் சமரசிங்க கூறினார்.

புலிகளும் அவர்களின் ஆதவாளர்களும் 'தமிழ்நெற்' இணையத்தளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். அதன்மூலம் இலங்கை அரசுக்கு எதிரான தவறான தகவல்களை சர்வதேசங்களுக்கு வழங்கி வருகின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறும் பொதுமக்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் அவர்களை நாம் பாதுகாப்போம்.

அவர்களின் பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம் அளிக்கிறது. அவர்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வர். அவர்களின் பாதுகாப்பிற்கு நாம் உத்தரவாதம் அளித்திருக்கின்றோம் என்றார் மஹிந்த சமரசிங்க. (சி)

# இறைவனை இதயத்தில் பார்

வெளி உறுப்புகளும், உள் உறுப்புகளும் கொண்ட ஸ்தூலமான தேகம்தான் உடல் என்று மட்டுமே கருதலாகாது. தார்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இறைவன் நமக்கு இவ்வுடலை வழங்கியிருக்கின்றார். மனம், பாவனைகள் அல்லது உணர்ச்சிகள், எண்ணங்கள் இவற்றை உருவாக்குகிறது. அவை வாயின் மூலமாக நாக்கின் துணைகொண்டு சொற்களால் வெளியிடப்படுகின்றன. அவையே உடலுறுப்புகளின் மூலமாக செயலாக வெளிவருகின்றன. மனித வாழ்க்கை, எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் கூட்டமைப்பாகும். மனிதன் மூலமாக இறைத்தன்மை வெளிப்படுகிறது. ஆனால் பலர் இதனை உணர்வதில்லை.

*பிரபஞ்சத்தைப் படைத்த ஒருவரை, படத்துக்குள் அடைக்கமுடியுமா?*
*தேவர்களும் அறியவொண்ணா இறைவனை, வெறும் மனிதன் புரிந்துகொள்ள இயலுமா?*
*அனைத்து நாம ரூபங்களில் வெளிப்படுத்திக்கொள்பவரை, என்ன பெயரிட்டு அழைப்பது?*
*பிரபஞ்சமே வயிறாறக் கொண்ட ஒப்பற்ற ஆற்றலுக்கு, நீ எதை அர்ப்பணம் செய்ய இயலும்?*
*கோடி சூர்யப் பிரகாசமுள்ள இறைவனை நீ எந்த வெளிச்சத்தைக் கொண்டு காண்பிப்பாய்.*

இத்தகைய ஒப்பற்ற ஆற்றலை நாம் குறுகிய முறையில் வழிபடலாகாது. வெளியுலகம் முழுவதையும் ஒரு சிறு கண்ணாடியில் காண்பது போல, பிரபஞ்சம் முழுவதும் பரந்து விரிந்துள்ள இறைவனை உனது இதயத்துக்குள் காண இயலும்.

அவர் இதயவாசி. நீ யார்? அவர் யார்? இவ்வாறு விசாரித்தால், 'நான்' உள்ளிருக்கும் ஆத்மா. பார்ப்பவன், இவையனைத்தும் பார்க்கப்படுபவை. இவ்வுலகம் முழுமையும் பார்ப்பவன், பார்க்கப்படுபவன் இரண்டின் முடிவு நிலை.



சாயி சிந்தனை

# வாசகர் திருமுகம்

## வீதியைத் திருத்தும்போது சிறார்களின் சுகத்தையும் கவனியுங்கள்

தென்மராட்சியில் ஒரேயொரு தேசிய பாடசாலை சாவகச்சேரி இந்துக் கல்லூரி. இதன் அருகாமையில் தனியான நிர்வாகத்தைக் கொண்டு இயங்கும் பாடசாலை சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையாகும். இங்கு ஐநூறுக்கு மேற்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

மேற்படி இரு பாடசாலைகளையும் ஊடறுத்துச் செல்கின்ற ஒரு சிறிய 10 அடி வீதி உள்ளது. இவ்வீதி இதுவரை நாளும் குன்றும் குழியும் மணலுமாகக் காணப்பட்டது.

ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் சாவகச்சேரி நகர சபை நிர்வாகத்தினர் இவ்வீதியைக் கிரவல் வீதியாக அமைக்கும் முயற்சியிலீடுபட்டுள்ளனர். இவ்வீதிக்கு முதலில் தென்மராட்சியில் மலிவாகக் கிடைக்கும் கட்டட இடிபாடுகள் போடப்பட்டன. பின்னர் சுண்ணக்கல் தூசு போடப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டது.

எமது குடாநாடு மிகவும் வெப்பமான காலநிலையைக் கொண்ட பிரதேச மாகும். வெயில் மிகவும் அதிகமாகக் கொண்ட எமது பகுதி வீதிகளுக்கு இந்தச் சுண்ணக்கல் தூசு போடுவது பொருத்தமானதா? தினமும் இரு பாடசாலைகளையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்படுத்தும் இவ்வீதிக்கு தூசு போடுவதை விட்டு தார் வீதி அல்லது கொங்கிறீற் வீதி அமைக்கமுடியாதா?

பிஞ்சுக் குழந்தைகள் ஓடி ஆடி நடந்து செல்லும்போது எவ்வளவு தூசியை அவர்கள் சுவாசிக்கிறார்கள், போதாக்குறைக்கு வகுப்பறையில் இருக்கும்போதும் காற்றுடன் செல்லும் தூசியைச் சுவாசிக்கின்றார்கள். பாடசாலைகளிலுள்ள மின்சார உபகரணங்களான கணனி, போட்டோ கொப்பி இயந்திரம் போன்றவை தூசியால் நிரம்பி வழிகின்றன. இவையனைத்தும் பழுதடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. மாணவர்கள் சாப்பாடு கூடச் சாப்பிட முடியாமல் தூசி படிகின்றது.

அதிகாரிகளே வீதியைச் செப்பனிட முன்வரும் தொண்டு நிறுவனங்களுக்கு வேறு விதமான முன்மொழிவுகளைச் செய்யமுடியாதா? அவர்களது ஒதுக்கீடு இவ்வளவு தானா? அல்லது நீங்கள் கேட்பதில்லையா? ஆக, பத்து அடியே அகலமான இவ்வீதியைப் பாடசாலை விடுமுறைக் காலத்தில் செப்பனிட முடியாதா? பணம் திரும்பி விடுமா? அல்லது முடிந்துவிடுமா? பிஞ்சுக் குழந்தைகள் நடந்து செல்லும் இந்த வீதிக்கு தூசு போடுவதற்கு நீங்கள் தீர்மானித்தது சரியா? உங்கள் பிள்ளைகள் இப் பாடசாலைகளில் கல்வி கற்கவில்லையா?

இப்போது நண்பகல் 12மணிக்கு நீங்கள் ஒருதடவை இவ்வீதியால் நடந்தோ அல்லது ஏதோவொரு வாகனத்தில் வந்தால் போதும். மறுகணம் குளித்து உடை மாற்றித்தான் போகவேண்டும் அவ்வாறு மோசமான தூசு ஆக உள்ளது வீதி.

எனவே எதிர்காலச் சிறார்களின் நலன் கருதி இதனைக் கருதிலெடுத்துத் துரிதமாகச் செயற்படுமாறு விநயமாக வேண்டுகின்றோம்.

பெற்றோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

வினாத்தாள் - II நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

**01. தரப்பட்டுள்ள பாடலை வாசித்து விளங்கி வினாக்களுக்கு விடை தருக.**

> "தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
> சாலைக்குப் போ என்று சொன்னார் - உன் அன்னை
> சிலைபோல ஏனங்கு நின்றாய்? - நீ
> சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்"
> -பாரதிதாசன்-

1) இப்பாடலைப் பாடியவர் யார்?

...........................................................

2) யார் பாடசாலைக்குப் போ என்று சொன்னார்?

...........................................................

3) பிள்ளை எதைப்போல நின்றது?

...........................................................

4) பாடலில் கூறப்பட்ட பிள்ளை ஆணா? பெண்ணா?

...........................................................

5) பாடலில் உள்ள முன்னிலைப் பெயர்ச்சொல் எது?

...........................................................

6) நின்றாய் என்பது எக் காலத்தை உணர்த்துகின்றது?

...........................................................

7) அன்னை என்பதன் ஒத்தசொல் ஒன்று தருக.

...........................................................

8) ஏனங்கு என்பதைப் பிரித்து எழுதுக.

...........................................................

9) போ என்பதன் எதிர்ச்சொல் யாது?

...........................................................

10) நிகழ்கால வினைச்சொல் ஒன்று தருக.

...........................................................

**02. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1) கடற்கரை - ..........................................
2) தேநீர் - ..........................................
3) பாற்குடம் - ..........................................

**03. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பூர்த்திசெய்க.**

1) அடம்பன் கொடியும் ..........................................
2) அகத்தின் அழகு ..........................................
3) காற்றுள்ள போதே ..........................................

**04. கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப் பதங்களை எழுதுக.**

1) Sky - ..........................................
2) Principal - ..........................................
3) Hospital - ..........................................
4) Door - ..........................................

**05. பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1) அலியா - ..........................................
2) பத் - ..........................................

3) கிரவா - ..........................................

**06. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1) எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் வித்து எது?
1. பலா. 2. மா. 3. தென்னை. 4. பனை.

2) எமது நாட்டின் தேசிய மலர் எது?
1. தாமரை. 2. நீலோற்பலம். 3. செவ்வரத்தை. 4. அலரி.

3) பறக்கும் முலையூட்டி எது?
1. வெளவால். 2. பெங்குயின். 3. ஆந்தை. 4. கழுகு.

4) 2008இல் ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற நாடு எது?
1. அவுஸ்திரேலியா. 2. இங்கிலாந்து. 3. அமெரிக்கா. 4. சீனா.

5) மண்ணைக்கொண்டு சட்டி, பானை செய்பவன்
1. சிற்பி. 2. குயவன். 3. கொத்தன். 4. மாலுமி.

6) எமது நாட்டில் அதிகமாக வாழும் மக்கள் எந்த இனத்தவர்கள்?
1. பௌத்தர். 2. இந்துக்கள். 3. கிறிஸ்தவர். 4. இஸ்லாமியர்.

7) இலங்கையின் மிகப்பெரிய நதி எது?
1. களனி கங்கை. 2. வளவ கங்கை. 3. களு கங்கை. 4. மகாவலி கங்கை.

8) புகைவண்டி இயங்குவதற்குப் பயன்படும் எரிபொருள் எது?
1. பெற்றோல். 2. டீசல். 3. மண்ணெண்ணெய். 4. ஒயில்.

9) தாவரங்களுக்குத் தீமைசெய்யும் பிராணி பின்வருவனவற்றுள் எது?
1. வெட்டுக்கிளி. 2. வண்ணத்துப் பூச்சி. 3. மண்புழு. 4. தேனீ.

10) தோமஸ் அல்வா எடிசன் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
1. ஜேர்மனி. 2. இத்தாலி. 3. அமெரிக்கா. 4. போர்த்துக்கல்.

**07. பின்வரும் கணித வினாக்களுக்கு விடை தருக.**


1) வெற்றுக் கூடுகளை நிரப்புக.

1.
```
   3 4 5
 + 2 □ 7
 -------
   □ 7 8
```

2.
```
   6 9 7
 - 2 3 □
 -------
   4 □ 5
```

2) எண்கோலத்தில் அடுத்துவரும் எண்களை எழுதுக.


5, 10, 15, 20, .........., .........., 35

3) 


கடிகாரம் காட்டும் நேரம் யாது?

...........................................

4) அருகில் தரப்பட்டுள்ள சதுரத்தின் சுற்றளவு யாது?




...........................................

5) அழிறப்பர் ஒன்றின் விலை 6 ரூபா ஆகும். அத்தகைய நான்கு அழிறப்பர்களின் விலை யாது?

...........................................

6) குவியல் ஒன்றில் 86 தேங்காய்கள் உள்ளன. வேறொரு குவியலில் 123 தேங்காய்கள் உள்ளன. இரண்டு குவியலிலும் உள்ள தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?

...........................................

7) 

நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

...........................................

8) வடக்கிற்கும் மேற்கிற்கும் இடைப்பட்ட திசை எது?

...........................................

9) கட்டத்தில் உள்ள இலக்கங்களைக்கொண்டு உருவாக்கக்கூடிய மிகச்சிறிய எண் யாது?

| | |
|---|---|
| 4 | 6 |
| 2 | 9 |

...........................................

தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க............

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன், வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இலகுவாகத் தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10)

| | |
|---|---|
| 4 | 6 |
| 2 | 9 |


கட்டத்தில் உள்ள இலக்கங்களைக்கொண்டு உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது?. ..............................................

11) அருகில் தரப்பட்டுள்ள திண்ம உருவின் பெயர் யாது?



..............................................

12) இவ் உருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?



..............................................

13) இன்று திங்கட்கிழமை ஆயின், நாளை மறுநாளுக்கு அடுத்தநாள் என்ன கிழமை?

..............................................

14) 3m75cm ஐ சென்ரிமீற்றரில் தருக.

..............................................

08. "எமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டி" என்னும் தலைப்பில் நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்கள் அமைக்குக.

1)

..............................................

2) ..............................................

தொடர்ச்சியான பயிற்சியே
" உயர்ச்சி தரும்"

..............................................

4)

..............................................

5) ..............................................

6) ..............................................

ஆக்கம்:- திரு.சண சுதர்சன்,
கண்டி.

**கடந்த 26.02.2009 இல் வெளிவந்த வினாத்தாள் 1இற்கான விடைக்குறிப்புக்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 - 3 | 02 - 2 | 03 - அருவம் | | 04 - புருவம் |
| 05 - 4 | 06 - 1 | 07 - சரி | | 08 - சரி |
| 09 - பிழை | 10 - பருவம் | 11 - 2 | 12 - 3 | 13 - 2 |
| 14 - 3 | 15 - விளையாடவேண்டாம் | | 16 - நெருங்கி | 17 - 13 |
| 18 - 0 | 19 - 3 | 20 - 1 | 21 - 3 | 22 - 1 |
| 23 - 3 | 24 - 3 | 25 - 3 | 26 - 2 | 27 - 1 |
| 28 - 3 | 29 - 3 | 30 - 1 | 31 - 2 | 32 - 3 |
| 33 - 3 | 34 - 3 | 35 - 2 | 36 - 3 | 37 - 3 |
| 38 - 2 | 39 - 2 | 40 - 3 | | |

**இப்பரீட்சைத் தொடருக்கு வினாத்தாள்களை வழங்கும் ஆசிரியர்களின் விவரம்**

* திரு.மன்மதகாந்தன் - கொழும்பு
* திரு.சாஜித் - நிந்தவூர்
* திரு.அம்பிகைபாகன் - கொழும்பு
* திரு.சுதர்சன் - கண்டி
* திரு.கபிலன் - வவுனியா
* திரு.அன்பழகன் - யாழ்
* திரு.தவகுலரெட்ணம் - கொழும்பு
* திரு.தீபன் - வவுனியா
* திரு.புன்னியாமீன் - கண்டி
* திரு.சுரேஸ்குமார் - கம்பளை
* திரு.சந்திரபவன் - கொழும்பு
* திரு.தயாளலிங்கம் - திருமலை
* திரு.பத்மநேசன் - திருமலை
* திரு.பிரதீப்குமார் - கொழும்பு
* திரு.சேனநாயக்கா - கொழும்பு

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 071-6850005 / 071-4273035



மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தின் மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை சின்னம் சூட்டிக் கௌரவித்தார்.

பிரதம விருந்தினர், பாடசாலை அதிபர் திருமதி சத்தியகுமாரி சிவகுமார், ஆசிரியர்கள் ஆகியோருடன் மாணவ முதல்வர்கள் நிற்கின்றனர். *(படம்:சங்கானைச் செய்தியாளர்)*



இளவாலை பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா மற்றும் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுகின்றனர்.

*(படம்: நவாலிச் செய்தியாளர்)*



12 ஆண்டுகளாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் அதிபராக சேவையாற்றி மாற்றலாகிச் சென்ற வண.பிதா ஜே.ஏ. ஜேசுதாஸ் அடிகளாரின் சேவை நயப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழா நாயகனுக்கு முன்னாள் ஆசிரியர் சி.லீனஸ் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் ஆசிரியர் நலன்புரிச் சங்கத் தலைவர் கே. கியோமர் வாழ்த்துப்பா கையளிப்பதையும் படங்களில் காணலாம். (325)



வட்டு. திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் வி.மினேஸ்வரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: சுழிபுரம் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் நடத்தப்பட்ட 'இசையால் இணைவோர்' சிறுவர் இசை, நடன நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

உடுவில் 'ஆர்க்' நிறுவன உத்தியோகத்தர் அருட்சகோதரி வசந்தி மங்கல விளக்கேற்றுவதையும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியக இயக்குநர் அருட்பணி பிரவீன் மகேசன் அடிகள் (அ.ம.தி) மற்றும் நவீல்ட் பாடசாலை அதிபர் திருமதி கருணரட்ண ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

கைதடி, நவீல்ட் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனம், உடுவில் 'ஆர்க்' நிறுவன மாணவர்களின் நாடகம் ஆகியவற்றை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: பரமலிங்கம்)


## விற்பனைக்கு

2 மாதம் நிரம்பிய மறிக்குட்டியுடன் (1½ போத்தல்) நல்லின பாலாடும் (செவியாடு), 1½ வயது J.C நாம்பன் கன்றும் விற்பனைக்குண்டு.
இல.57, K.K.S. வீதி,
[கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத்தடிக்குமிடையில்]
கொக்குவில்.
(83268)

## விற்பனைக்கு

தேநீர் கடைக்குரிய கவுண்டர்மேசை, கண்ணாடி சோக்கேஸ் சோடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: செல்வா பல் சுவையகம்
(மில்க்வைற் அருகில்)
K.K.S.றோட், யாழ்ப்பாணம்.
T.P. 077 9452074
(83266)

## எழுதுவினைஞர் தேவை

பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கில அறிவு கணனி அறிவுடைய எழுது வினைஞர் ஒருவர் தேவை. 14.03.2009 இற்கு முன்னர் சுய விவரங்களுடன் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
மே/பா.உதயன்,
விளம்பர இல. 3178
(83269)


# சேற்று நிலங்களைப் பூங்காவாக மாற்றத் திட்டம்

கொழும்பு, மார்ச் 5

நாடாளுமன்றத்தையும் பத்தர முல்லை நகரையும் அண்மித்துள்ள சேற்று நிலங்களை நகரப்பூங்காவாக பசுமை வலயத் திட்டத்தின் கீழ் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுற்றாடல் துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தேவையற்ற வகையில் நிலத்தை நிரப்புதல் கழிவுப் பொருள்களைக் கொட்டுதல் போன்றவற்றால் சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கம்.

சுற்றாடல் துறை அமைச்சு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து 150 மில்லியன் ரூபா திட்டத்தில் இதனை செயற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

இதற்கான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டு விட்டது என்றும் இத்திட்டம் இம்மாத இறுதிக்குள் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (203-6)

## துன்னாலை - தொண்டைமானாறு வீதி புனரமைக்கப்படுகிறது

கட்டைவேலி, மார்ச் 5

துன்னாலை - தொண்டைமானாறு வீதியின் ஒரு பகுதியை அகலமாக்கும் பணியினை வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இப்பிரதான வீதியில் உப்புறோட் வல்வைச் சந்திக்கும் வல்வை நாற்சந்திக்கும் இடைப்பட்ட வீதியே அகலமாக்கப்பட்டு வருகிறது.

வீதியின் இரு பகுதிகளிலும் வெள்ளைக் களிமண் இடப்பட்டு வீதி அகலமாக்கப்பட்டு வருகிறது.

இவ்வீதி மிக ஒடுக்கமாக இருந்தமையால் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழாக் காலத்தில் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து, செல்வச் சந்நிதிக்கு சென்று வரும் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திச் செல்ல முடியாதவாறு வீதியில் இட நெருக்கடி இருந்து வந்தது.

தற்போது வீதி அகலமாக்கப்படுவதால் இவ்வீதிகளூடான போக்குவரத்து நெருக்கடி குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (203-236)

## மஹிந்த - புஸ்பகமால் சந்திப்பு

கொழும்பு,மார்ச் 5

நேபாளத்திற்கு 3 நாள்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் நேபாளப் பிரதமர் புஸ்பகமால் டாவூவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை பிரதமரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இதில் இரண்டு நாடுகளும் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இச்சந்திப்பின் போது காத்மண்டுவிற்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகள் இடம்பெறுவதற்கான உடன்படிக்கையும் கல்வி, கலாசாரம், விவசாயம், வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டதாகவும் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (203-6)

## சட்டவிரோத செயற்பாடுகளால் நாவற்குழி மக்கள் விசனம்

நாவற்குழி,மார்ச் 5

நாவற்குழி தெற்கு பாடசாலை வீதியில் அண்மைக் காலமாக கசிப்பு விற்பனை, சட்ட விரோதமாகக் கள் விற்பனை என்பன மிகத் தீவிரமாக நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரே இவ்வாறான சட்டவிரோத விற்பனையை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் சட்ட விரோதமான முறையில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதாகவும், சில வேளைகளில் பசுக்களும் இவ்வாறு இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடிக் கவனமெடுத்து இச்சட்ட விரோத செயற்பாடுகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (203-288)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் பங்கு கொள்ளுமாறு மேற்படி சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (201)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் இராமலிங்கம் சாந்தலிங்கம்

தோற்றம்:23.02.1937

மறைவு:03.02.2009

கடந்த 03.02.2009 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.03.2009) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 03.02.2009 அன்று சிவபதம் அடைந்து 04.02.2009 அன்று நடைபெற்ற எமது குல விளக்கின் இறுதிக் கிரியைகளில் நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறிய எமது அன்பு உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தரோடை.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



திருவாட்டி
கதிரவேலு
இந்திராணி

மலர்வு
01.04.1918

உதிர்வு
15.03.2008

திதி: பூர்வபக்க நவமி (05.03.2009)

எம் தாயும் எமக்கருள் தந்தையுமாய்
எமைப் பாலூட்டி தாலாட்டி வளர்த்தெடுத்த
தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

பொற்பதி வீதி,
செம்பாட்டு ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்பின் உறைவிடமே
எங்களை நல்வழிப்படுத்திய
அருமை அம்மா, அம்மம்மா
உங்கள் புன்னகை மாறாத முகம்
எம் நெஞ்சில் நிலைத்து நிற்குதம்மா
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஓராண்டு ஆனாலும்...
உங்கள் நினைவுகள் மாறாதம்மா
மீண்டும் ஒரு பிறப்புண்டேல்
எம்மிடமே வந்திடுங்கள் அம்மம்மா
உங்கள் ஆத்மா சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

திருமதி சுப்பிரமணியம்
இலட்சுமிப்பிள்ளை

தோற்றம்: 17.02.1920

மறைவு: 15.02.2008

திதி: 05.03.2009

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

கலட்டிச் சீமா, அல்வாய் கிழக்கு, அல்வாய்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
03
1940



மறைவு
08
03
2006

அமரர் சிதம்பரி தங்கவேல்
(இளைப்பாறிய அதிபர், யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)

திதி: 05.03.2009

கண்ணின் இமைபோல
காத்த எம் தந்தையே
விண்ணிற்கு நீர் விரைந்து
மூவிராண்டு சென்றாலும்
மண்ணில் நாம் இருக்கும்வரை
மறக்குமோ உம் நினைவு

என்றும் உம் நினைவுடனே:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாவற்காடு, அச்சுவேலி.

(83253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## அனுஷா செல்வராசா



பெறுபேறு: 3ஏ (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நான் எனது ஆரம்பக் கல்வியினை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கற்று பின்பு மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சேர்ந்து கொண்டேன். தொடர்ந்து உயர்கல்வியில் கலைப் பிரிவைத் தெரிவு செய்து தமிழ், அளவையியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்றேன். பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு படித்து வெற்றி கண்டுள்ளேன்.

பாடசாலைப் போக்குவரத்து எனக்குச் சிரமமாக இருந்தாலும் கூட பாடசாலை அதிபர், பாட ஆசிரியர்கள் ஆகியோரின் ஊக்குவிப்பினால் எனக்கு இந்தப் பெறுபேறு கிடைத்துள்ளது எனலாம். தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் என்னுடைய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளனர்.

நான் இந்தப் பெறுபேற்றை எடுப்பதற்கு எனது பெற்றோர்களே மிகவும் கஷ்டப்பட்டுள்ளார்கள். நான் இப்பாடசாலையில் சேர்வதற்கும், இப்பெறுபேற்றை எடுப்பதற்கும் என்னுடைய மாமா மற்றும் அண்ணா ஆகியோரின் உதவியும் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் எனக்கு வழிகாட்டலாக அமைந்திருந்தது.

நான் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியபோது குறிப்பிட்ட வினாக்களைத் தெரிவு செய்து படிக்கவில்லை. அதனால் பரீட்சையின் போது சில வினாக்கள் கடினமாகவே இருந்தது. இருப்பினும் அதனை எதிர்கொண்டு 3ஏ எடுத்துள்ளேன். நான் 3ஏ எடுப்பதற்கு காரணமாக இருந்த அனைவருக்கும், கடவுளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் எதிர்காலத்தில் ஓர் ஆசிரியராகி சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.

## ஜனார்த்தனி பாலச்சந்திரன்



பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நான் எனது ஆரம்பக்கல்வியை வரணியில் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் கற்றேன். பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தரம் 8 இலிருந்து உயர்தர வகுப்புவரை கல்வி கற்றேன்.

உயர்தர வகுப்பில் கலைத்துறையில் எழுந்த நாட்டம் காரணமாக கலைப்பிரிவைத் தெரிவு செய்தேன். இப்பிரிவில் பொருளியல், வணிகப் புள்ளிவிவரவியல், தமிழ் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். பொருளியல், வணிகப்புள்ளிவிவரவியல் ஆகிய பாடங்கள் கடினமாக இருந்த போதிலும் அதில் நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன்.

நான் வரணியிலிருந்து பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வந்து இப்பாடசாலையில் கல்வி கற்றேன். நான் பல்கலைக்கழகம் சென்று சிறந்த ஒரு பிரஜையாக வரவேண்டும் என்ற நோக்கோடு கலைப்பிரிவைத் தெரிவு செய்தேன். சிறந்த பெறுபேற்றைப் பெற்று அந்நோக்கில் வெற்றி கண்டேன்.

பெறுபேற்றிற்கு உறுதுணையாக இருந்தவர்கள் எனது பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், பாட ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், சக மாணவிகள் ஆவர். நான் இப்பெறுபேற்றை எடுப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபருக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மற்றும் வகுப்பாசிரியருக்கும், பாடஆசிரியருக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் பெற்றோருக்கும் எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் நான் எனது கல்விக்கு பாடசாலை நூலகத்தையே பயன்படுத்தினேன். நான் தெரிவு செய்து படித்த வினாக்கள் வந்தமையும் மற்றும் எதுவும் விடாமல் சகலத்தையும் கற்றதனாலேயே இப்பெறுபேறு எனக்குக் கிடைத்தது. மேலும் என்னைக் கற்பித்த ஆசிரியர்கள் அனுபவசாலியாகவும் திறமையான கற்றல் மிக்கவர்களாகவும் இருந்தமையே காரணம். எனவே நான் பொருளியல் சார்ந்த பரந்த அறிவினைப் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம்.

## தனுஷ்கா அனந்தேஸ்வரன்



பெறுபேறு: ஏ2பி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நான் ஆரம்பக் கல்வியை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் அதன் பின்னர் மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலையிலும் பயின்றேன். ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன். இப்பாடசாலைகள் மூலமாக எனது கல்வியை நான் சிறப்பாகப் பயில முடிந்தமைக்காக இப்பாடசாலைகளுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

நான் ஜி.சீ.ஈ.சா/த பாடசாலையில் 7ஏ3பி பெறுபேறு பெற்றேன். உயர் கல்விக்காக கலைத்துறை மீதிருந்த நாட்டத்தின் காரணமாக கலைத்துறையைத் தேர்ந்தெடுத்தேன். அதில் தமிழ், புவியியல், வணிகப் புள்ளிவிவரவியல் ஆகியவற்றை என் சுய விருப்பத்தின் பேரில் படித்தேன்.

எமது பாடசாலை உயர் பாதுகாப்புவலயத்தில் அமைந்திருந்த போதிலும் அதிபரினதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பினாலும் வழிகாட்டலினாலும் சவால்களை எமக்கான ஊக்கமாகக் கருதி கல்வியைத் தொடர்ந்தேன்.

இப்பெறுபேற்றை எய்துவதற்கு உதவிய இறைவனுக்கும் எனது பெற்றோருக்கும் சிறுவயதிலிருந்து உயர்கல்வி வரை கல்வியூட்டிய அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எனது நண்பிகளுக்கும், உறவினர்களுக்கும், சகோதரர்களுக்கும் இப்பெறுபேற்றை காணிக்கையாக்குகின்றேன். இவர்கள் என்றென்றும் என் நன்றிக்குரியவர்கள்.

கலைத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்கள் தமக்குரிய பாடங்களை மிகவும் அவதானமாகவும் தமக்கு எந்தப் பாடத்தில் ஆர்வம் உள்ளது என்பதைக் கவனித்தும் தெரிவு செய்வார்களேயானால் வெற்றி பெறுவார்கள்.

எதிர்காலத்தில் எனது ஆசியர்களுக்கும், பெற்றோருக்கும் பெருமை தேடித் தரும் வகையில் நான் செயலாற்ற வேண்டுமென்பதே என் விருப்பம்.

## நிலானி கணேசலிங்கம்



பெறுபேறு: ஏபிசி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நான் எனது ஆரம்பக் கல்வியை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கற்றேன். பின்னர் தரம் ஆறிலிருந்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்றேன். நான் உயர்தரத்தில் வணிகப் பிரிவைத் தெரிவு செய்தேன். சிறுவயதிலிருந்தே வணிகப் பிரிவில் கற்க வேண்டும் என்பது எனது ஆசை.

பாடசாலையில் நான் கல்வி கற்பதற்கு அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் உறுதுணையாக இருந்தனர். மற்றும் பெற்றோர், நண்பர்கள், சகோதரர்கள் அனைவரும் பல்வேறு ஊக்குவிப்புக்களையும் வழங்கினர். தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் எனது கற்றல் நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கினர்.

நான் இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், பெற்றோர், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் வங்கித் தொழிலில் ஈடுபட்டு சிறப்படைய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

## கம்ஷா தில்லைநாதன்



பெறுபேறு: 3ஏ (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

எனது ஆரம்பக் கல்வியை மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் பின்னர் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் கற்றேன்.

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் 7ஏ3பி ஐப் பெற்றேன். வர்த்தகத் துறையில் இருந்த ஆர்வம் காரணமாகவும் பெற்றோர், சகோதரி, சகோதரர்களின் வழிகாட்டலின் கீழும் வர்த்தகத் துறையைத் தெரிவு செய்தேன்.

எனக்கு ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை பல்வேறு ஊக்குவிப்புக்களையும் வழிகாட்டல்களையும் வழங்கிய அதிபர், ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். எதிர் காலத்தில் ஒரு நற்பிரஜையாகத் திகழ்ந்து சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஊன்று கோலாக விளங்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்று மாவட்டத்தில் 10ஆவது நிலையை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த எனது பெற்றோர், அக்கா, அண்ணா, தம்பி, உறவினர்கள் மற்றும் அதிபர், பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## றம்சிகா இரகுநாதன்



பெறுபேறு: 2ஏசி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

எனது ஆரம்பக் கல்வியை மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் பின்னர் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் கற்றேன். நான் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவை மிகவும் விரும்பித் தெரிவு செய்தேன் .எனது கல்விக்கு ஊக்கமளித்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் எனது குடும்பத்தவர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடவுளின் ஆசியும் இருந்தமையால் எனக்கு இந்தப் பெறுபேறு கிடைத்துள்ளது.

சந்திப்பும், படங்களும்:
ஔண்யன்,
கணேசமூர்த்தி,
30

நான் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் 5ஏ2பிஎஸ் பெறுபேற்றைப் பெற்றேன். நான் எதிர்காலத்தில் கணக்கியல் துறையில் ஒரு உயர் அதிகாரியாக வரவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். அதுவே எனது அம்மாவின் விருப்பமும் ஆகும். கடவுள் நம்பிக்கையும் அதிபர், ஆசிரியர்களில் மதிப்பும், மரியாதையும் வைத்து ஆர்வத்துடன் கல்வி கற்றதனால் இந்தப் பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். எதிர்காலத்தில் எனது சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

## நளினி சிவசுப்பிரமணியம்



பெறுபேறு: ஏபிசி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நான் எனது ஆரம்பக் கல்வியைத் துன்னாலை மேற்கு மெ.மி.த.க பாடசாலையில் பயின்றேன். பின்னர் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றேன். நான் உயர்தரத்தில் வர்த்தகத்துறையை விரும்பிப் படித்தேன். வங்கித் தொழில் புரிய வேண்டும் என்ற விருப்புடன் அதனைப் படித்தேன். நான் வர்த்தகத் துறையில் இப்பெறுபேற்றை எடுப்பதற்காக எனக்கு பல வழிகளில் ஆக்கமும், ஊக்கமும் தந்த எனது பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசனுக்கும் எனது வகுப்பாசிரியர் செல்வி சிவரூபினி சண்முகதாஸ் மற்றும் எனது பாடசாலை உப அதிபர் ஏனைய ஆசிரியர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது கல்விக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் புரிந்த எனது அம்மா, அப்பாவுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது அப்பாவுக்கு நான் உயர் தரத்தில் சிறந்த பெறுபேறு பெறவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அதனால் அவரது ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற அவாவுடன் படித்தேன்.

மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் வங்கி உத்தியோகத்தராகப் பணி புரிய வேண்டும் என்பதே இலக்கு ஆகும். இவை அனைத்துக்கும் மேலாக வெல்லிக்கந்தோட்டப் பிள்ளையாரின் ஆசியும் நான் இப்பெறுபேற்றை எடுப்பதற்குக் காரணம்.

## மாதுமை சுந்தரலிங்கம்



பெறுபேறு: ஏபிசி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நான் எனது ஆரம்பக்கல்வியை அல்வாய் வடக்கு , றோ.க.த.க பாடசாலையில் கற்றேன். தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்றேன். நான் உயர்தரத்தில் வணிகப் பிரிவைத் தெரிவு செய்து கல்வியைத் தொடர்ந்தேன். சிறுவயதிலிருந்தே வணிகப்பிரிவில் கற்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

பாடசாலை அதிபர் ,ஆசிரியர்கள் எனது கற்றலுக்குரிய வளங்களையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கினார்கள். மேலும் எனது பெற்றோர்,சகோதரர்கள் ,நண்பர்கள் ஆகியோரும் எனது கற்றலுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர்.தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் எனது கற்றல் நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கினார்கள்.

உயர்தரத்தில் நான் இப்பெறுபேற்றை எடுக்க உதவிய பாடசாலை அதிபர் ,ஆசிரியர்கள் , தனியார் கல்விநிலைய ஆசிரியர்கள்,பெற்றோர் ,சகோதரர்கள்,நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் வங்கியில் வேலை செய்யவேண்டும் என்பது எனது விருப்பம்.

## சங்கீதா சின்னத்தம்பி



பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நான் எனது ஆரம்பக் கல்வியை அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கற்று பின்பு மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் சேர்ந்து கொண்டேன். தொடர்ந்து உயர் கல்வியை கற்பதற்காக கலைப் பிரிவைத் தெரிவு செய்து தமிழ், அளவையியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்து கற்றேன்.

நான் பல்கலைக்கழக வாய்ப்பை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு கற்றேன். இப்போது நான் அதில் வெற்றிகண்டுள்ளேன். எனது இப்பெறுபேற்றிற்கு பாடசாலை அதிபர், பாட ஆசிரியர்கள் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். இவர்களோடு தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களது உதவியும் இருந்தது.

நான் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்பதே எனது பெற்றோர், சகோதரிகளின் ஆசையாகும். நான் இப்பெறுபேற்றை பெற்றது என்னை விட எனது பெற்றோர், சகோதரிகளுக்கு மிகவும் மகிழ்ச்சி. இவர்களும் எனது கல்விக்கு தங்களால் இயன்ற அளவு உதவி செய்திருக்கிறார்கள்.

நான் பரீட்சைக்குத் தயாராகும் போது மீட்டல் பயிற்சியில் ஈடுபடுவேன். இரவு வேளைகளிலே அதிகமாகக் கற்பேன். பரீட்சைக்கு தோற்றிய போது சில பாடங்கள் கடினமாக இருந்தது. இருந்தாலும் அதனை எதிர்கொண்டு நல்ல பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.நான் எதிர்காலத்தில் ஒரு ஆசிரியராகி எனது சமூகத்திற்கு சேவை செய்வேன். நான் பெறுபேற்றை எடுப்பதற்கு காரணமாக இருந்தவர்களுக்கும், இவற்றிற்கு மேல் இறைவனுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜானக பெரேரா மீதான தாக்குதல்; சந்தேகநபருக்கு 63 லட்சம் ரூபா

## புலிகள் வழங்கியதாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

வட மத்திய மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு விடுதலைப் புலிகள் 63 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளனராம்.

இது விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் அனுராதபுரம் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம் நீதிமன்ற நீதிபதி ருச்சிர வெலிவத்த முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே, இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவரும் இரகசியப் பொலிஸார் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளனர்.

தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரினதும் அவரது மனைவியினதும் மக்கள் வங்கிக் கணக்கில் 35 லட்சம் ரூபா விடுதலைப் புலிகளால் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் புலிகள் தமக்கு 28 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர் என்று சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைகளில் தெரிவித்துள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய தற்கொலைக் குண்டுதாரி தனது தேசிய அடையாள அட்டையின் பிரதியை வழங்கி கையடக்கத் தொலைபேசியின் 'சிம்காட்' ஒன்றைப் பெற்றமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் இந்த விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

விசாரணை தொடர்ந்தும் இடம்பெறுவதாக நீதிமன்றில் தெரிவித்தனர். (203)

## நடமாடும் கருமபீடம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையினர் கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி நடமாடும் கருமபீடம் சேவையினை நடத்தினர்.

நடமாடும் கருமபீடத்தில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்த 41 சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் அப்பகுதியில் விவசாயம் மேற்கொள்ளும் 24 விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டதாக கிளை முகாமையாளர் க.சந்திரகுமாரன் தெரிவித்தார்.

வங்கி வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நடமாடும் கருமபீடத்தினை ஆரம்பித்து வைத்தார். (203- 207)

## யுத்த நிறுத்தத்துக்கு உதவ பிரிட்டனிடம் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 5

இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய உதவ வேண்டும் எனக் கேட்டு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு அமைப்பு பிரிட்டிஷ் அரசைக் கோரியுள்ளது.

சென்னையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு நேற்று முன்தினம் சென்ற அந்த அமைப்பின் பிரமுகர்கள் பிரதித் தூதர் மிக்கோணரிடம் இது தொடர்பாக மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், இலங்கைப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் பி.நெடுமாறன் ஆகியோர் கொண்ட மூவர் குழு இச்சந்திப்பில் கலந்து கொண்டது.

பிரிட்டிஷ் அரசு இலங்கை விவகாரத்தில் தலையிட்டு உடனடிப் போர் நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என பிரிட்டிஷ் தூதரிடம் வற்புறுத்தினோம் என்று நெடுமாறன் தெரிவித்தார். (அ-1)



# தவக்காலச் சிந்தனை



## வெளிவேடக்காரர் போன்று நோன்பிருக்க வேண்டாம்

"நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். நீங்கள் நோன்பு இருப்பது உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும்" (மத் 6:16:18) என்று இறைமகன் நமக்குத் தெளிவுபடுத்துகின்றார். ஆனால் கிறிஸ்தவ விசுவாசிகள் சிலர் தாங்கள் வாரத்தில் ஒரு நாள் நோன்பு இருக்கின்றோம் என்று கூறி தாங்கள் நோன்பு இருப்பதைப் பகிரங்கப்படுத்தி தாங்கள்தான் உண்மைக் கிறிஸ்தவர்கள் என்று சான்று பகருகின்றார்கள். ஆனால் இப்படி தாங்கள் நோன்பு இருப்பதைப் பகிரங்கப்படுத்துவது இறைமகன் இயேசு கற்பித்தவற்றுக்கு எதிர்மாறானது என்பதை இந்த வாசகமூடாக உணர வேண்டும்.

கடவுளின் கிருபைக்காய் நோன்பு இருப்பவர்கள் சுயநலத்தையோ அல்லது பொது மக்களின் பாராட்டையோ எதிர்பார்க்கக் கூடாது. மாறாக கடவுளுடைய இரக்கப் பெருக்கத்திற்காக, அவரது நிறைந்த அன்பிற்காய் அனைத்தையும் மறந்து, உணவையும் மறந்து ஆண்டவரின் வார்த்தையே உணவு, அவரது சித்தமே எனக்குப் பானம், அவரது கருணையே எனக்கு வாழ்வு என்று ஆண்டவருக்காகக் காத்திருக்கும் மனம், இந்த ஏக்கத்தால் வாழும் விசுவாசி மேற்கொள்வதே நோன்பாகும்.

நம் இறைமகன் இயேசு நாற்பது நாள் நோன்பிருந்தார். தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார். மனித சந்தடிகளைவிட்டு விலகி மாமிச உடலுக்கு ஆதாரமாய் இருக்கும் உணவைத் தள்ளிவைத்து தமது பரம தந்தையின் சித்தத்தையும் விருப்பத்தையும் நாடினார். இந்தச் சம்பவம் நோன்பின் மகத்துவத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

இன்று அநேகர் பலவிதான உலக கவலைகளிலும், செல்வ மாஜைகளிலும் சிக்கி தேவ வார்த்தையை தாங்கும் ஞானத்தை இழந்து வருகின்றார்கள். இதிலிருந்து விடுதலைபெற சத்துருவின் வலையில் சிக்காதிருக்க நோன்பிலிருந்து தேவ வார்த்தைகளை மனதினில் சுமந்து வெளிவேடமற்ற கிறிஸ்தவ வாழ்வு வாழ்வோமாக.

குருநகர். க.அருள்நேசன்.


## அலுவலக உத்தியோகத்தர் தேவை

ஆங்கில அறிவும், கணிதத்தில் விசேட சித்தியும் விரும்பத்தக்கது. நேர்முகப் பரீட்சை 07.03.2009 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேவையான சான்றிதழுடன் சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு:
**BIO TEC**
*131/2 Palaly Road, Thirunelvely.*
(விவசாய பண்ணைக்கு அருகில்)
T.P. 4590907
(சி/557373)

## காணவில்லை

கறுப்பு நிறமுடைய "டோமன்" பெட்டை நாயை 02.03.2009 இலிருந்து காணவில்லை (விசேட அடையாளங்கள்: முகம் மண்ணிறம், கூளை வால், வயிற்றுப் பகுதியில் சிறிய வட்ட வடிவமான புண் உள்ளது.) கண்டவர்கள் தகவல் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
செம்மணி பாம்
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, தொ.பே.இல: 060 221 7497
(83270)

# STUDY IN INDIA

## GARDEN CITY COLLEGE

BANGALORE UNIVERSITY DEGREES

*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK*

**Courses Offered**

| | |
|---|---|
| BCA | Bachelor of Computer Application |
| B.Sc. | Computer Science/Microbiology/ Genetics Biotechnology/Fashion and Apparel Design |
| B.A. | Journalism/B.Com Computers |
| BBM | Bachelor of Business Management |
| BHM | Bachelor Of Hotel Management |
| BPT | Bachelor of Physiotherapy |
| LAW | Bachelor of Law |

* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying
www.studyingcc.com
தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.

## 16ஆம் நாள் சபிண்டீகரண கிரியை அழைப்பு



கடந்த சர்வதாரி மாசி 7ஆம் நாள் (19.02.2009) வியாழன் அன்று தேகம் உதிர்ந்து ஏகம்பன் பால் சென்ற எம் தாய்த் தெய்வம்

**அமரர் தங்கராசா ஐயர்** *(பண்டார ஐயர்)*
**இராசமணி** *(இராசாத்தி)*

அவர்களின் 16ஆம் நாள் சபிண்டீகரண கிரியை சர்வதாரி மாசி 22ஆம் நாள் (06.03.2009) வெள்ளி காலை 8 மணிக்கு செல்வச் சந்நிதி தீர்த்தக் கரையில் நடைபெற உள்ளது. அம் முகூர்த்தத்திலும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய மாகேஸ்வர பூஜையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி கோயிலடி,
தொண்டைமானாறு. (சி/557380) மக்கள்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1068 நீலம்

வெற்றி இலக்கங்கள்

துலாம் 05 10 49 55

03-03-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400516328 - 400537023

ஜக்பொட் பரிசு ரூபா. 11,324,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 222,233 | 20/- | 4,444,660/- |
| 2 இலக்கங்கள் | 20,407 | 40/- | 816,280/- |
| 1 இல. + லக்கினம் | 20,198 | 60/- | 1,211,880/- |
| 2 இல. + லக்கினம் | 1,848 | 200/- | 369,600/- |
| 3 இலக்கங்கள் | 546 | 1000/- | 546,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 11,324,400/- | - |
| மொத்தம் | | | 8,568,420/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 265,298 | | 9,068,420/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 11,820,875/-

தொடர் இலக்கம் 500528134 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 மார்ச் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 400533684-7-48 |
| கொழும்பு | 400528250-8-30 |
| இரத்தினபுரி | 400522709-1-44 |
| புத்தளம் | 400524533-6-21 |
| கேகாலை | 400535[illegible] |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## பயிற்சி வகுப்புகள்

இணுவில், மார்ச் 5

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் பாடசாலையை விட்டு விலகியோர் நலன்கருதி தொழில் தகைமை பெறத்தக்க வகையில் பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது. தமிழ் சுருக்கெழுத்து, தமிழ் தட்டச்சு, ஆங்கில தட்டச்சு, கணினிப்பயிற்சி ஆகிய வகுப்புகள் ஏப்ரல் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்து பாடசாலையை விட்டு விலகியவர்கள் இந்த வகுப்புகளுக்கு விண்ணப்பிக்க முடியும். ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (201-45)




# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## திசைமுகப்படுத்தும் நிகழ்வு (Orientation Programme)- 2009

## வணிக முதற் தேர்வு

கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008

மேற்படி இரு கல்வியாண்டுகளிலும் வணிக முதற் தேர்வுக்குப் பதிவு செய்த மாணவர்களுக்காக 07.03.2009 தொடக்கம் 15.03.2009 வரை திசைமுகப்படுத்தும் நிகழ்வொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபத்தில் பின்வரும் நேர அட்டவணையின் படி நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி இரு கல்வியாண்டுகளுக்கும் பதிவு செய்த மாணவர்களை இந்நிகழ்வில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**நேர அட்டவணை**

| திகதி | | நேரம் |
|---|---|---|
| 07.03.2009 | (சனி) | 9.00- 3.30 |
| 08.03.2009 | (ஞாயிறு) | 9.00- 3.30 |
| 10.03.2009 | (செவ்வாய்) | 9.00- 3.30 |
| 14.03.2009 | (சனி) | 9.00- 3.30 |
| 15.03.2009 | (ஞாயிறு) | 9.00- 3.30 |

பதில் பதிவாளர்.
04.03.2009 (சி/557379)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் அணு ஆயுத தயாரிப்புகளுக்கு ரஷ்யா உதவுவதைத் தடுக்க அமெ. முயற்சி

நியூயோர்க், மார்ச் 05

அணு ஆயுத தயாரிப்பில் ஈரானுக்கு உதவிகள் செய்வதை ரஷ்யா நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்படி நிறுத்தப்பட்டால், ரஷ்யாவுக்கு எதிராக கிழக்கு ஐரோப்பாவில் ஏவுகணைகள் நிறுத்தப்படமாட்டா என ரஷ்யாவிடம் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பராக் ஒபாமா தாம் இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவுக்கு எழுதியுள்ள இரகசியக் கடிதத்தில் இதை நிபந்தனையாக விதித்துள்ளார் என 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை தெரிவிக்கிறது.

இரகசியமாக எழுதப்பட்ட அந்தக் கடிதம் எப்படி நியூயோர்க் டைம்ஸுக்குக் கிடைத்தது எனத் தெரியவில்லை.

ரஷ்யாவை இன்னும் தன்னுடைய முக்கிய எதிரியாகக் கருதும் அமெரிக்கா, ரஷ்யா மீது எப்போதாவது தாக்குதல் நடத்த நேரிட்டால் அதற்கு உதவியாக இருக்குமெனக் கருதி கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏவுகணைகளை நிறுத்தி வருகிறது. இவற்றின் குறி தன்மீதுதான் எனத் தெரிந்து வைத்துள்ள ரஷ்யாவும் அது பற்றிய தனது அதிருப்தியை அடிக்கடி வெளிப்படுத்தி வருகிறது. இந்நிலையில், ரஷ்யாவைச் சமாதானப்படுத்தும் நோக்கில் ஒபாமா இந்தக் கடிதத்தை எழுதியிருந்தார் எனக் கருதப்படுகிறது.

ஈரானுக்குச் செய்துவரும் இராணுவ உதவிகளை நிறுத்தினால், ரஷ்யாவுக்கு இத்தகைய சலுகைகள் காட்டப்படும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. எனினும், அமெரிக்க அணிக்கு அனுசரணையாக ரஷ்யா வருவதை அமெரிக்கா விரும்புகிறது என்பதை அது புலப்படுத்துகிறது.

ஈராக்குக்கு அடுத்தபடியாக தான் நுழைய வேண்டிய களம் ஈரான்தான் என அமெரிக்கா நினைக்கிறது. அதற்கு முன்னோடியாகவே ஈரானின் அணுகுண்டு தயாரிப்புத் திறன் குறித்து தனக்குள்ள அச்சத்தை வெளிப்படுத்தி அமெரிக்கா கடிதம் எழுதியிருக்கிறது.

ஒன்று நாங்கள் சொல்வதைப்போல கேட்டுச் செயற்படுங்கள். இல்லையேல் ஈரானுக்கு உதவிகளைச் செய்யாமலும் பரிந்து பேசாமலும் வாயை மூடிக்கொண்டிருங்கள் என்பதுதான் அந்தக் கடிதத்தின் நோக்கம் என ராஜீயத்துறை நடவடிக்கைகளில் நல்ல அனுபவம் உள்ள நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கடிதத்திற்கு மொஸ்கோவிலிருந்து பதில் எதுவும் வரவில்லை. ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கடிதத்தை அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரிகள் 3 வாரங்களுக்கு முன்னர்தான் மொஸ்கோவுக்கு நேரடியாகச் சென்று ஜனாதிபதி மெத்வதேவை நேரில் சந்தித்து கையளித்திருக்கிறார்கள்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கி லவரோவ், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை ஜெனீவா நகரில் எதிர்வரும் சனிக்கிழமை சந்திக்கவுள்ளார். அப்போது ரஷ்யாவின் பதில் நேரிலேயே தெரிவிக்கப்படலாம் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ஒபாமாவும், மெத்வவேவும் லண்டனில் ஏப்ரல் 2 ஆம் திகதி சந்தித்துப் பேசவிருக்கின்றனர். அப்போது மேற்கொண்டு இது குறித்து ஆலோசனை கலக்கப்படும் என்றும் அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## பங்களாதேஷ் கிளர்ச்சி சம்பவத்தின் கொலை சூத்திரதாரிகள் ஐவர் கைது

டாக்கா, மார்ச் 05

இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்ட பங்களாதேஷ் கிளர்ச்சிக்குத் துணை இராணுவ அதிகாரி ஆலமே முக்கிய காரணகர்த்தா என தெரியவந்துள்ளது. அவருக்கு உடந்தையாகவிருந்த துணை இராணுவ அதிகாரிகள் மூன்று பேரும், சிப்பாய்கள் 2 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளர்ச்சிக்கு ஆலமே முக்கிய சூத்திரதாரி என்பது உறுதியாகிவிட்டது. எனினும், அவருக்கு எதிராக போதிய ஆதாரங்களைத் தாங்கள் திரட்டி வருகின்றனர் என லால்பாக் பொலிஸ் நிலையத் தலைவர் ஜோதி கிஷா தெரிவித்தார்.

## இஸ்ரேலில் கூட்டரசு அமைந்தாலும் அமெரிக்காவின் ஆதரவு அதற்குண்டு

### ஹிலாரி கிளின்ரன் தெரிவிப்பு

டெல் அவிவ், மார்ச் 05



''இஸ்ரேலில் புதிய கூட்டரசு அமைப்பது தொடர்பான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. எத்தகைய அரசு அமைக்கப்பட்டாலும் அதற்கு அமெரிக்காவின் ஆட்டங் காணாத ஆதரவு உண்டு'' என இஸ்ரேலிய விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் மீள உறுதியளித்தார்.

பராக் ஒபாமாவின் அமெரிக்க நிர்வாகத்தின் உயர்மட்ட இராஜதந்திரியாக ஹிலாரி கிளின்ரன் இஸ்ரேலுக்கான தமது முதல் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

''ஹிலாரி கிளின்ரன் தமது எகிப்திய விஜயத்தை முடித்துக்கொண்டு இஸ்ரேல் வந்தடைந்தார். இவர் ஜெரூசலேமில் ஜனாதிபதி சிமோன் பெரஸைச் சந்தித்து பேச்சுகள் நடத்தினார். இதையடுத்து, வெளியேறவிருக்கும் வெளிவிவகார அமைச்சர் சிபி லிவ்னியைச் சந்தித்து பேச்சுகள் நடத்தினார். இவர் இடைக்காலப் பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட்டையும் சந்திக்கவிருந்தார். இஸ்ரேலில் அமெரிக்காவின் சில முக்கிய கொள்கைகளுக்கு ஆட்சேபனை தெரிவித்துவரும் வலதுசாரி பிரமுகரான பெஞ்சமின் நெத்தானியாகு, அடுத்த இஸ்ரேலிய அரசை நிறுவுமாறு கேட்கப்பட்டுள்ளார்.




ஹிலாரி கிளின்ரன் இஸ்ரேலிய ஜனாதிபதி சிமோன் பெரஸைச் சந்தித்த பின்னர் செய்யாளர் மாநாரேலுக்கு அமெரிக்காவின் ஆட்டங்காணாத - நிலையான - அடிப்படையிலான ஆதரவு என்றுமுண்டு. இஸ்ரேலின் பாதுகாப்புக்கு எமது துணை உண்டு'' என்றார்.

## அமெரிக்க – பிரிட்டன் உறவை மேலும் வலுப்படுத்த ஒபாமா உறுதி!

வாஷிங்டன், மார்ச் 05

''அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே ''விசேட உறவு'' உண்டு. இந்த உறவு மென்மேலும் வலுவடையும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வெள்ளைமாளிகையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் தெரிவித்துக் கொண்டார்.

இதற்கு முன்னர் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுணுக்கும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்குமிடையே சந்திப்பு நிகழ்ந்தது. இதில் இருதரப்பினரும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்.



பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுண், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா

பராக் ஒபாமா பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில், ''இரு நாடுகளுக்குமிடையிலான விசேட உறவு எனக்கு மாத்திரம் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றல்ல. அமெரிக்க மக்களுக்கே முக்கியத்துவம் வாய்ந்தது'' எனக் குறிப்பிட்டார்.

''உங்கள் இருவருக்குமிடையிலான தனிப்பட்ட ஒற்றுமை என்ன ?'' என ஊடகவியலாளரொருவரால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு ஒபாமா பதிலளிக்கையில், ''இருவருக்குமே பிரமிக்கத்தக்க மனைவியரும், வியத்தகு பிள்ளைகளும் இருக்கிறார்கள். இது பொதுப்படையான ஒற்றுமை'' என்றார்.

''எங்களின் நெருங்கிய பலம் பொருந்திய அணிகளில் பிரிட்டனுமொன்று. இவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவும், பிணைப்பும் முறிக்க முடியாதவை. இந்த உறவு விசேடமானது மாத்திரமல்ல. வலுவானது மாத்திரமல்ல. காலப்போக்கில் மென்மேலும் வலுவடையக் கூடியது'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

இச்சந்திப்பில் பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரிவுண் பேசுகையில், ''புதிய காலகட்டத்தில், எங்களுக்கிடையிலான விசேட உறவை புதுப்பிக்கும் பொருட்டே இங்கு நான் வருகை புரிந்துள்ளேன். இது பரஸ்பர பரிவர்த்தனைக்கான ஒரு நிரந்தர உறவு'' எனக் குறிப்பிட்டார்.

''ஒவ்வொரு சவாலையும் மதிநுட்பத்தோடும், மனோ திடத்தோடும் எதிர்நோக்கும் பொருட்டு, இந்த இருதரப்பு உறவும் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. உலக பொருளாதார நெருக்கடிகளுக்கு நாம் ஒருங்கிணைந்து பரிகாரம் தேட வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது '' என்றும் அவர் கூறினார்.

## கினியா - பிசாவின் தலைவராக அந்நாட்டின் சபாநாயகர் தெரிவு

மேற்கு ஆபிரிக்க நாடான கினியா - பிசாவின் ஜனாதிபதி கொல்லப்பட்டமையை அடுத்து, நாடாளுமன்றத்தால், அந்நாட்டின் இடைக்காலத் தலைவராக, சபாநாயகர் ரெய்முண்டோ பெரைரா தெரிவு செய்யப்பட்டார்.

கினியா - பிசாவின் அரசமைப்பு விதிக்கிணங்க, இடைக்காலத் தலைவர் 60 நாட்களுக்குள் புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை பூர்த்தி செய்துவிட வேண்டும். இந்த கால எல்லைக்குள் இத் தேர்தலும் இடம்பெற்றுவிடும்.

ஜனாதிபதி ஜோவோ பெர்னார்டோ வயிரா திங்கட்கிழமை, அதிருப்தி இராணுவச் சிப்பாய்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை, இராணுவப் பிரதம தளபதி குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஐ.நா. பாதுகாப்புச்சபை, இவ்விரு படுகொலைகளையும் வன்மையாகக் கண்டித்துள்ளது. அத்துடன் இப்படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்களை நீதிவிசாரணைக்கு உட்படுத்துமாறும் இச்சபை அரசை வலியுறுத்தியுள்ளது.

இடைக்காலத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர் ரெய்முண்டோ பெரைரா, செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## போபால் விஷவாயுக் கசிவுச் சம்பவத்தை 25 ஆண்டுகள் கடந்தாலும் மறக்க முடியாது

### அமெ. தொழிற்சங்கத் தலைவர் கூறுகிறார்

• வாஷிங்டன், மார்ச் 05

இந்தியாவின் போபால் நகரில் இடம்பெற்ற விஷவாயுக் கசிவு விபத்து, அதே யூனியன் கார்பைட் ஆலை அமெரிக்காவில் இருந்திருந்தால் நடந்திருக்காது என அமெரிக்க தொழிற்சங்கத் தலைவர் மைக்கல் ரைட் மனம் வெதும்பிக் கூறியிருக்கிறார்.

அமெரிக்க நாடாளுமன்றக் குழுவில் இது குறித்து அவர் சாட்சியம் அளித்தார். அப்போது அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

1984 டிசம்பர் மாதம் மத்தியப் பிரதேசத் தலைநகர் போபாலில் இடம்பெற்ற விஷவாயுக் கசிவு விபத்துக்குப் பின்னர் அந்த ஊரைப் பார்க்கச் சென்ற சர்வதேசக் குழுவில் நானும் ஒருவன். என்னுடன் இன்னொரு அமெரிக்கரும் வந்திருந்தார்.

அங்கே நான் கண்ட காட்சிகள் என் நினைவில் அழியாத சோக சித்திரங்களாகப் பதிவாகிவிட்டன. சம்பவம் நடந்து 25 ஆண்டுகள் ஆன பின்னரும் கூட அநேக இரவுகள் தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

மகன், மகளை இழந்து துடிக்கும் பெற்றோர்களின் முகங்களும் தாய், தந்தையரை இழந்த குழந்தைகளின் முகங்களும் கனவுபோல வந்து என்னை வதைக்கின்றன.

அந்த ஆலையில் இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும், விஷ வாயுவைத் தயாரித்து அதைத் தொட்டியில் சேமித்து வைத்திருந்த விதத்தையும் பார்த்தபோது இந்த ஆலை அமெரிக்காவில் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடக்க அனுமதிக்கப்பட்டிருக்குமா என்ற கேள்வியே என் மனதுக்குள் ரீங்காரமிட்டது.

உயிரையே குடிக்கும் எனத் தெரிந்தும் அந்த நச்சு வாயுவை ஓர் ஆலை - ஏன் தயாரிக்க வேண்டும்? அந்த ஆலைக்கு ஊருக்கு நடுவில், ஏன் இடம் ஒதுக்கப்பட வேண்டும்? ஒரு பெரிய நகரத்தையே நாசப்படுத்தும் அளவுக்கு விஷ வாயுவைத் தொட்டியில் ஏன் சேமித்து வைக்க வேண்டும்? என பல கேள்விகள் என்னுள் எழுந்தன.

நம் நாட்டிலுள்ள சட்டங்களும் அவற்றை நாம் கண்டிப்புடன் அமுல் செய்யும் முறையும் இங்கு உள்ளமையால், இந்த அளவுக்கு தான்தோன்றித்தனமான ஆலை இங்கு செயற்படுவது சாத்தியம் அல்ல. அப்படியே செயற்பட்டிருந்தாலும் அதன் நிர்வாகிகளும், பொறுப்பாளர்களும் இந்நேரம் தூக்கில் தொங்கியிருப்பார்கள் அல்லது இன்று வரையும் கம்பி எண்ணிக் கொண்டிருப்பார்கள்.

நம் நாட்டு ஆலை பாதுகாப்புச் சட்டங்கள் மிகக் கடுமையானவை என சில வேளைகளில் தோன்றலாம். அப்படியிருப்பதால்தான் இங்கு ஓர் உயிர்ப்பலியும் நடக்காமல் உள்ளது. பாவம் இந்தியர்கள், அவர்களுக்கும் சட்டம், விதிகள் இருக்கின்றன. அமுல் செய்வதில் அந்நாட்டு அரச அதிகாரிகளும் அதை மேற்பார்வையிட வேண்டிய ஆட்சியாளர்களும் அலட்சியமாக இருப்பதால் அங்கு உயிருக்கு மதிப்பே கிடையாது.

## காந்தியின் பொருள்களை ஏலவிற்பனை செய்வதை நிறுத்த புதுவித நிபந்தனை

வாஷிங்டன், மார்ச் 05

இந்திய அரசு வறிய மக்களுக்கு அதிக உதவிகளை வழங்குமானால், தாம் ஏல விற்பனை செய்யவுள்ள மகாத்மா காந்தியின் சொந்தப் பொருள்களை இந்திய அரசுக்கே நன்கொடையாக வழங்கத் தாம் தயார் என அவற்றை வைத்திருக்கும் அமெரிக்கர் புதுவிதமான நிபந்தனை ஒன்றை விதித்துள்ளார்.

தமது மொத்த உள்ளூர் உற்பத்தியில் வறிய மக்களுக்கு செலவிடும் தொகையை ஒரு வீதத்திலிருந்து 5 வீதமாக உயர்த்த இந்திய அரசு தயாராக இருந்தால், தம்வசம் உள்ள காந்தியின் மூக்குக் கண்ணாடி, மணிக்கூடு ஆகியவை உட்பட அவருக்குச் சொந்தமான பொருள்களை இந்திய அரசுக்கு வழங்கத் தாம் தயார் என்று ஜேம்ஸ் ஒடிஸ் என்னும் அந்த நபர் குறிப்பிட்டுள்ளார்.

காந்திஜிக்குச் சொந்தமாக இருந்த இந்தப் பொருள்களில் பல இந்த வார இறுதியில் நியூயோர்க்கில் ஏலம் விடப்படவுள்ளன. இதை இந்தியாவிலுள்ள பலர் எதிர்க்கின்றனர்.

அந்தப் பொருள்கள் இந்தியாவின் பாரம்பரிய சொத்து என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா, ராகுல்காந்தியின் தொகுதிகளில் தங்கியிருந்து பிரியங்கா தேர்தல் பிரசாரம்

## போட்டியிடும் எண்ணம் இல்லை என்கிறார் அவர்



அமேதி, மார்ச். 05

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எனக்கு இல்லை. எனது தாயார் சோனியா காந்தியின் தொகுதியிலும், அண்ணன் ராகுல் காந்தியின் தொகுதியிலும் தங்கியிருந்து பிரசாரத்தில் ஈடுபடுவேன். அந்த இரு தொகுதிகளிலுமே நான் முழுக்கவனம் செலுத்துவேன் - என்று பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ராகுல் காந்தி. கடந்த திங்களன்று நாடாளுமன்றத் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில், பிரியங்கா காந்தி, தனது அண்ணன் ராகுலின் தொகு தியான அமேதிக்கு நேற்றுமுன்தினம் சென்றார்.

காரிகஞ்ச் நகரில் நடந்த சேவாதள மாநாட்டில் அவர், தொண்டர்களை அழைத்து பேசினார். அப்போது அவர், தேர்தல் வெற்றிக்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி விளக்கினார்.

மாநாட்டில் அவர் பேசியவை வருமாறு -

தேர்தல் பற்றிய அறிவிப்புகள் வெளியாகி விட்டது. எனவே வெற்றிக்காக, தொண்டர்கள் பாடுபட வேண்டும். தொண்டர்கள் பயனை எதிர்பார்க்காமல், வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களின் சேவை நினைவு கூரப்படும்.

மக்களின் பிரச்சினைகள் என்ன என்பதை ஆய்வு செய்து அவற்றைத் தீர்த்து வைக்க முயற்சிகள் எடுக்க வேண்டும்.

அமேதி, ரேபரேலி (சோனியாவின் தொகுதி) ஆகிய தொகுதிகளில் வெற்றிக்காக தொண்டர்கள் முழு மூச்சுடன் பாடுபட வேண்டும். இந்த இரு தொகுதி மக்களும், எங்கள் குடும்ப உறுப்பினர்கள் போன்றவர்கள் - என்றார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எனக்கு இல்லை. எனது தாயார் சோனியா காந்தியின் தொகுதியிலும், அண்ணன் ராகுல் காந்தியின் தொகுதியிலும் நான் பிரசாரம் செய்வேன். அந்த இரு தொகுதியிலும் முழு கவனம் செலுத்துவேன்.

ஏனென்றால், அவர்கள் இருவரும், இந்தியா முழுவதும், காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடுவார்கள். எனவே அவர்களது தொகுதிகளில் நான் தங்கியிருந்து பிரசாரத்தில் ஈடுபடுவேன் - என்றார்.



இலங்கையில் நடக்கும் இனப்படுகொலையைத் தடுக்கக் கோரி சென்னையில் உள்ள இங்கிலாந்து துணைத்தூதரிடம், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க தலைவர்கள் நேற்றுமுன்தினம் மனுக் கொடுத்தபோது......

# பா.ஜ.க. ஆட்சிப்பீடம் ஏறினால் ஈழத்தமிழர் பாதுகாக்கப்படுவர்

## மீண்டும் அடித்துக் கூறுகிறார் இல. கணேசன்



ஈரோடு, மார்ச். 5

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.கட்சி தனித்துப் போட்டியிடும் - என்று அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் இல. கணேசன் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஈரோட்டில் நடந்த தேர்தல் வழிகாட்டுதல் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோதே இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும் போட்டியிடுவதா? அல்லது ஒரு சில தொகுதிகளில் போட்டியிடுவதா என்பது குறித்து 2 விதமான சிந்தனைகள் உள்ளன. வருகின்ற 12ஆம் திகதி சென்னையில் மாநில தேர்தல் குழு கூட்டம் நடக்கிறது.

இந்தக் கூட்டத்தில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்து முடிவு செய்யப்படும். 15ஆம் திகதி எங்கள் வேட்பாளர் பட்டியல் முறைப்படி அறிவிக்கப்படும்.

பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தால் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும். உள்நாட்டு பாதுகாப்பு வலுப்படுத்தப்படும். தற்போது இலங்கை அரசுக்கு மத்திய அரசு ஆயுதம், நிதி, படைகளை வழங்கி இருப்பதற்கான ஆதாரம் உள்ளது.

தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க.வுக்கு எதிர்ப்பு அலை இருக்கிறது. இதை நாங்கள் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வெற்றி பெறுவோம். நாங்கள் வாக்குறுதிகள் கூறப்போவது இல்லை. வாஜ்பாய் ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகளை மக்களிடம் கூறி வாக்குக் கேட்போம். தமிழகத்தில் தனித்து போட்டியிடவே முடிவு செய்து இருக்கிறோம். ஆனால், அத்வானியின் தலைமையை ஏற்க எந்தக் கட்சி முன்வந்தாலும் அவர்களை கூட்டணியில் சேர்த்துக்கொள்வோம் - என்றார்.

# இந்தியாவின் பாதுகாப்புக்காக தமிழினம் அழிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது

## திருமா ஆவேசம்



சென்னை, மார்ச்05

இலங்கைத் தமிழர் பிரச்சினையால் தமிழக அரசியல் பாதிக்கும் என்ற அச்சம் உருவாக வேண்டும். இந்தியாவின் பாதுகாப்புக்காக தமிழ் இனம் அழிக்கப்படுவதை ஏற்க முடியாது - என்று விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விழாவில், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது பற்றி மீனவர் ஜே.டி. குரூஸ் இயக்கிய 'விடியலை நோக்கி' என்ற ஆவணப்படத்தை வெளியிட்டு அவர் பேசியபோதே இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உணர்வுகள் அரசியல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றால்தான் அரசியல்வாதிகள் தங்கள் நிலையை மாற்றிக் கொள்வார்கள். பாகிஸ்தானும், சீனாவும் இலங்கைக்கு நிரந்தர நண்பனாகி அங்கு இராணுவத் தளத்தை அமைத்துவிட்டால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தாகி விடும் என்று மத்திய அரசு கருதுகிறது.

இலங்கை அரசை பகைத்துக் கொள்ளவே கூடாது என்பதுதான் இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையாக உள்ளது. காங்கிரஸ் ஆண்டாலும், பா.ஜ.க. ஆண்டாலும் இந்தக் கொள்கை மாறுவதில்லை. இந்தியாவின் பாதுகாப்புக்காக தமிழ் இனம் அழிக்கப்படுவதை ஏற்க முடியாது. தெற்காசிய நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற இந்திய அரசின் மனப்பான்மைதான் இதற்குக் காரணம்.

இலங்கையில் வீரத்துடன் போராடி வரும் போராளிகளால்தான் மீனவர்களுக்கும், தமிழர்களுக்கும், இந்தியாவுக்கும் பாதுகாப்பைக் கொடுக்க முடியும். இதனை இந்திய அரசுக்கு உரக்கச் சொல்ல வேண்டும் - என்றார்.

# தமிழர் விரோதக் கட்சியான காங்கிரஸுக்கு வாக்குப்போட மாட்டோமென சபதம் ஏற்குக!

## புரட்சியாளர்கள் ஆயுதத்தை ஆதரிக்கவில்லை; மணிவண்ணன் பேச்சு

தமிழருக்கு எதிராகச் செயற்படும் காங்கிரஸுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குப் போட மாட்டோம் என்று அனைவரும் சபதம் ஏற்கவேண்டும். புரட்சியாளர்கள் ஆயுதத்தை ஆதரிக்கவில்லை. அவர்கள் ஆயுதத்தை கையில் எடுக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். - என்று இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து புதுக்கோட்டையில் தமிழீழ உணர்வாளர்கள் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

புரட்சியாளர்கள் ஆயுதத்தை ஆதரிக்கவில்லை. அவர்கள் ஆயுதத்தை கையில் எடுக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படும் காங்கிரஸ் கட்சிக்கு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குப் போட மாட்டோம் என்று அனைவரும் சபதம் ஏற்கவேண்டும்.



இலங்கையை இரண்டாக்கி அதில் ஒன்றை பிரபாகரன் கையில் கொடுக்க வேண்டும் என்பது ஆசையல்ல. அங்கு மக்கள் அமைதியாகவும், ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதுதான் அனைவரின் எதிர்பார்ப்பு.

இலங்கையில் இராணுவத் தளம், இராணுவக் கருவிகள் மற்றும் அதிகாரிகளை அழியுங்கள். ஆனால் மிகவும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த சிங்களச் சிப்பாய்களைக் கொல்லாதீர்கள். விளை நிலங்களை சேதப்படுத்தாதீர்கள் என தாய் மண்ணை காப்பாற்ற பிரபாகரன் நாகரிகமாக போரினை நடத்துகிறார்.

இலங்கையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சியின் முக்கிய துறைகளை வைத்திருப்பதால் அந்நாட்டு போருக்கு இறுதி வடிவம் கிடைக்கவில்லை - என்றார்.

# ஈழத்தமிழருக்கு எதிரான காங்கிரஸை தேர்தலில் தனிமைப்படுத்த வேண்டும்

## டி.ராஜேந்தர் பேட்டி

சென்னை, மார்ச் 05

ஈழத் தமிழர்களுக்கு எதிரான காங்கிரஸை நாடாளுமன்றத் தேர்தலில் தனிமைப்படுத்த வேண்டும் - என்று இயக்குநரும், லட்சிய தி.மு.க. தலைவருமான விஜய டி.ராஜேந்தர் கூறியுள்ளார்.

இவர் 'குறள் ரி.வி.' இணையத்தளத் தொலைக்காட்சியைத் தொடங்குகிறார். இதன் தொடக்க விழாவில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

உலகம் முழுக்கவுள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கும் தளமாக ஒரு டி.வி. இருந்தால் நல்லது என்ற எண்ணத்தில் நான் தொடங்கியதே குறள் ரி.வி.

கடந்த இரண்டு மாதத்துக்கு முன்பே இதற்கான சோதனை முன்னோட்டம் நடந்தது. இணையத் தளத்தில் ஒளிபரப்பப்பட்டாலும் இது முழுக்க முழுக்க காட்சி வடிவிலான ஒளிபரப்பு என்பதால், நிகழ்ச்சிகளை முழுமையாக ரசிக்க முடியும்.



இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான கட்சி, காங்கிரஸ். எனவே, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியை தனிமைப்படுத்த வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில், நான் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்வேன். காங்கிரஸ் அல்லாத கட்சிகளுடன் கூட்டணி வைத்துக்கொள்வோம்.

இலங்கைத் தமிழர்களுக்காக முத்துக்குமார் என்ற இளைஞன் தன் உடலில் செந்தீ வைத்துக்கொண்டு உயிர்த் தியாகம் செய்தான். அந்தச் சம்பவத்தில் இருந்து தமிழர்களின் இதயங்களில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை கொளுந்து விட்டெரிய ஆரம்பித்திருக்கிறது.

எனவே, இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான கட்சிகள், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறமுடியாது. இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தால், கைது செய்யப்படுவோம் என்ற பயம் எனக்கு இல்லை - என்றார்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையால் பா.ம.க. கூட்டணியில் மாற்றம் வரும்

## அதை அவர்கள்தான் கூற வேண்டும் என்கிறார் டி.ராஜா



சென்னை, மார்ச் 05

மக்களவைத் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை பா.ம.க.தான் முடிவு செய்ய வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகளால் தி.மு.க. அணியிலுள்ள கட்சிகளுடன் சேர்ந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அந்தக் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் வரும் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலர் டி. ராஜா தெரிவித்துள்ளார்.

சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சியின் மாநிலக் குழு கூட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

மக்களவைத் தேர்தலுக்கான பணிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் தீவிரப்படுத்தியுள்ளனர். இலங்கைத் தமிழர் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகளில் பா.ம.க. மேற்கொண்டு வரும் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அந்தக் கட்சி தி.மு.க. அணியிலுள்ள கட்சிகளுடன் சேர்ந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அந்தக் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் வரும்.

இதுகுறித்து தங்களது நிலையை பா.ம.க தான் முடிவு செய்ய வேண்டும். எந்த அணியில் சேர்வது என்பது குறித்து பா.ம.க.தான் அறிவிக்க வேண்டும் - என்றார்.

# ஈழத் தமிழர் விடயத்தில் காங்.–தி.மு.கவிடையே குண்டுமணி அளவுகூட எந்தவித வேறுபாடுமில்லை

## நமக்கிடையே பிளவை உண்டாக்க சிலர் சதி முயற்சி என்கிறார் கருணாநிதி



சென்னை, மார்ச் 05

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி குறித்து, அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறிய விமர்சனங்களை காங்கிரஸ் நிர்வாகிகள் மறந்துவிட்டார்களா?

இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பிரச்சினையிலும் இரண்டு கட்சிகளும் கொண்டுள்ள கருத்துகள் ஒன்றுக்கொன்று முரண்பாடானதல்ல; இலங்கைத் தமிழர்கள் காப்பாற்றப்பட்டே ஆகவேண்டுமென்ற குறிக்கோளில் ஒரு குண்டுமணி அளவுக்குக் கூட என்றைக்கும் இரு கட்சிகளிடையே வேறுபாடோ, மாறுபாடோ இருந்தது இல்லை - என்று முதல்வர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

'15 தொகுதிகள் வேண்டும்' என்று தமிழக காங்கிரஸார் அந்தக் கட்சியின் மேலிடப் பொறுப்பாளர் ஆசாதிடம் வற்புறுத்தியமை தொடர்பாக செய்தி வெளியானது.

இந்தச் செய்திக்குப் பதிலளித்து கருணாநிதி நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு -

5 ஆண்டுகளாக மாற்றார் மனம் போன போக்கில் பேசியதை அலட்சியம் செய்து, மதச் சார்பற்ற மத்திய அரசு, மனிதநேயம் மிக்க மத்திய அரசு வலுப்பெற்றுத் திகழ ஒத்துழைத்து வரும் தி.மு.கவுடன் அணி சேரவேண்டாம் என்றும், அதற்கு மாறாக அ.தி.மு.கவுடன் சேர்ந்தால்தான் அமோக வெற்றி பெறலாம் என்றும் சில காங்கிரஸ் நிர்வாகிகள், குலாம் நபி ஆசாத் நடத்திய கூட்டத்தில் கோரினர் என செய்தி வெளியாகியுள்ளது.

ஒருவேளை அப்படி ஒரு சில காங்கிரஸ் நண்பர்கள் கிசுகிசுத்திருப்பார்களேயானால், சோனியா காந்தியை, அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா மோசமாக விமர்சித்ததை இந்த 5 ஆண்டுகள் காலத்தில் அவர்கள் எப்படி அவ்வளவு விரைவாகவா மறந்திருக்க முடியும்? இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பிரச்சினையில் கூட இரு தரப்பினருக்கும் இடையே அதன் காரணமாக ஏதாவது ஏற்படாதா, அதிலே குளிர்காய முடியாதா என்று நினைத்தார்கள்.

இலங்கைத் தமிழர்கள் காப்பாற்றப்பட்டே ஆகவேண்டுமென்ற குறிக்கோளில் ஒரு குண்டுமணி அளவுக்குக் கூட என்றைக்கும் இரு கட்சிகளிடையே வேறுபாடோ, மாறுபாடோ இருந்தது இல்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரை பரம்பரையாக வன்னியில் வாழ்ந்த மக்களை வவுனியாவில் வலுக்கட்டாயமாகக் குடியேற்றுவதா?

## ஜயலத் ஜயவர்த்தனா சபையில் சீற்றம்

கொழும்பு, மார்ச் 05

''பரம்பரை பரம்பரையாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள், வவுனியாவில் மனச்சாட்சிக்கு விரோதமாக - பலாத்காரமாகக் குடியேற்றப் படுகின்றனர். இந்தக் குடியேற்றம் தற்காலிகமானதாக இருக்க வேண்டும். நிலைமை வழமைக்குத் திரும்பியதும் அந்த மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்பட வேண்டும்.''

இவ்வாறு ஐ.தே.கட்சி எம்.பி. ஜயலத் ஜயவர்தன நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு பாரிய மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதைத் தடுக்க நான் ஜெனீவாவுக்கு மாத்திரமன்றி நரகத்துக்கும் செல்லத் தயங்க மாட்டேன்.

யுத்த வெற்றியில் முனைப்புடன் செயற்படும் அரசு அந்த வெற்றியைப் பெற்றுத் தரும் படையினரின் நலனில் அக்கறை செலுத்தவில்லை.

படையினருக்கு 80 வீத ஒய்வூதியம் வழங்கப்படும் என்று மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டது. ஆனால், இன்னும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

படையினருக்குத் தேவையான 'பெதடீன்' மருந்துக்குப் பாரிய தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலை யில் படையினருக்கு மருந்துப் பொருள் கள் உள்ளிட்டவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு நான் இந்தியா மற்றும் அமெரிக்கத் தூதுவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காத்திரமான தீர்வு அரசிடம் உண்டா தேசிய பிரச்சினைக்கு அரசு காத்திரமான அரசியல் தீர்வொன்றைக் கொண்டுள் ளதா? 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வை முன்வைக்க அரசு தயாரா? இது தொடர்பில் அரசின் நிலைப் பாட்டை உடன் தெரிவிக்க வேண்டும்.

நான் சமீபத்தில் மன்னார் ஆயர் இல்லத்திற்கும் வவுனியா வைத்தியசாலைக்கும் செல்வதற்கு முயற்சித்தபோது பாதுகாப்பு இல்லை என்று கூறி எனது பயணம் தடுக்கப்பட்டது. ஆனால், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மாத்திரம் அங்கெல்லாம் சென்று வருகிறார். கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் நானூறு, ஐநூறு வருடங்களாகப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்கள் இப்போது வவுனியாவில் பலாத்காரமாக - மனச்சாட்சிக்கு விரோதமாக - குடியேற்றப்படுகின்றனர்.

இந்தக் குடியேற்றம் தற்காலிகமானதாக இருக்கவேண்டும். நிலைமை சரியானதும் இம்மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்படல் வேண்டும்.

அரசு மக்கள் மத்தியில் யுத்த மனநிலையை வளர்ப்பதைக் கைவிடவேண்டும். தேசிய ஒற்றுமையை - இன ஒற்றுமையைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிங்கள மக்களுக்குத் தமிழ் பிரதிநிதிகளும், தமிழ் மக்களுக்கு சிங்களப் பிரதிநிதிகளும் உதவவேண்டும். அப்போதுதான் இன ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும். அதையே நான் இப்போது செய்கிறேன்.



வடக்கு - கிழக்குக்கு வெளியே தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று பிரதமர் கூறினார். ஆனால் அவர்கள் பயத்துடனும், சந்தேகத்துடனும்தான் வாழ்கின்றனர்.

மலையகத்தமிழர்கள் கூட பயந்துதான் வாழ்கின்றனர். ஹற்றன் தமிழர்கள் வெளியேவரப்பயப்படுகின்றனர். இந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டும் - என்றார். (அ-சி)

# இடம்பெயர்ந்து வவுனியா வந்தோரை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துக!

## சபையில் கிஷோர் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 05

"வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள மக்கள் உடனடியாக அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படல் வேண்டும்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சிவநாதன் கிஷோர் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வன்னி மக்கள் அவர்களின் உயிரைப் பாதுகாப்பதற்காகவே இடம்பெயர்ந்து வந்து வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர். அரசு போடும் சோற்றுக்காக அவர்கள் வரவில்லை. இந்த மக்களை அரசு உடன் மீள்குடியமர்த்த வேண்டும்.

வவுனியா முகாம்களில் உள்ள மக்களுக்கு வவுனியாவில் உறவினர்கள் இருந்தால், அவர்களை உறவினர்களுடன் செல்ல அரசு அனுமதிக்கவேண்டும்.

வன்னியில் எமது மக்கள் இறந்து கிடக்கின்றனர். அவர்களின் சடலங்களை நாய்கள் இழுத்துச்செல்லும் நிலையுள்ளது. இந்நிலை சிங்கள மக்களுக்கோ அமைச்சர்களுக்கோ தெரியாது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகிறது. ஆனல் இங்கு ஆள்கடத்தல், கப்பம்கோரல் உள்ளிட்ட அனைத்துவிதமான ஜனநாயக விரோத செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் எப்படி இந்த நாட்டை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்வது? எமது மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்படுவது நிறுத்தப்படல் வேண்டும்.

ஊடகங்களும் இந்நாட்டில் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. 'சுடர்ஒளி' பத்திரிகையின் ஆசிரியர் வித்தியாதரன் கடத்தப்பட்டார். பிறகு அவர் கைதுசெய்யப்பட்டார் என்று அரசு அறிவித்தது.

புலிகள் கொழும்பில் நடத்திய விமானத்தாக்குதலுடன் வித்தியாதரனுக்குத் தொடர்புள்ளது என்று அரசு கூறுகின்றது. இவ்வாறு அரசு ஊடகங்களையும் அடக்கி ஒடுக்குகின்றது - என்றார்.(அ-சி)

# சாதாரண அமைச்சர்களின் பாதுகாப்புக்கூட கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்படவில்லை

## பாகிஸ்தான் சம்பவத்துக்கு ஐ.தே.கட்சி கண்டனம்

கொழும்பு, மார்ச் 05

பாகிஸ்தான் சென்ற இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு சாதாரண அமைச்சர்களுக்கு வழங்கும் பாதுகாப்புக்கூட அங்கு வழங்கப்படவில்லை என்று ஐ.தே. கட்சி எம்.பி லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இலங்கை கிரிக்கெட் சபையிடம் பணம் இல்லாமையினாலேயே இலங்கை வீரர்கள் பாதுகாப்பற்ற பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டனர் என்று அவர் மேலும் சொன்னார்.

பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இந்திய அமைச்சர் சிதம்பரம் கூறிய கருத்துகளை ஆராய்ந்து பார்த்து இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அப்போது அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

1996ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறார் என்றும் ரணில் கூறினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நெருங்கிய உறவு காணப்படுவதால் இப்பிரச்சினை மிகக் கவனமாகக் கையாளப் படவேண்டியுள்ளது என்று கூறினார்.

# பஸ் சாரதியின் சாதுரியத்தால் உயிர் தப்பிய இலங்கை வீரர்கள்

லாகூர், மார்ச் 5

தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு மத்தியில் நிலைகுலையாமல் துணிச்சலோடு செயல்பட்ட பஸ் சாரதியின் வீரம்தான் இலங்கை வீரர்களின் உயிரைக் காப்பாற்றியது. அந்த சாரதியின் வீரச்செயலுக்கு இலங்கை வீரர்கள் நெகிழ்ச்சியோடு நன்றி கூறியுள்ளனர்.

லாகூரில் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை வீரர்களின் பஸ்ஸை வழிமறித்த தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். இதனால் அனைவரும் திகைத்துப்போயினர். இருந்தும் இந்த நெருக்கடியான நிலையிலும் பஸ் சாரதி முகமது கலீல் பதட்டமடைந்துவிடாமல் பஸ்ஸை நிறுத்தாமல் வெகுவேகமாக ஓட்டிச்சென்றார். இதனால் இலங்கை வீரர்கள் அனை வரும் உயிர்தப்பினர். ஒரு சில வீரர்கள் காயத்தோடு தப்பினர்.

பஸ் சாரதியின் இந்தத் துணிச்சலான செயல் இலங்கை வீரர்களை நெகிழச்செய்தது. அவசரமாக பாகிஸ்தானிலிருந்து விமானத்தின் மூலம் இலங்கை புறப்படுவதற்கு முன்னர் தங்களது பஸ் சாரதியை அழைத்து அவருக்கு நேரில் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இலங்கை சுழற்பந்து வீச்

### பரிசளித்தார் முரளி

சாளர் முரளிதரன் தன்னுடைய ஒருநாள் தொடருக்கான உடையை சாரதிக்கு பரிசாக வழங்கினார்.

இலங்கை வீரர்கள் தனது நாட்டின் விருந்தாளிகள் என்றும், அவர்களுக்கு ஆபத்து நேராமல் காப்பாற்றுவது தனது கடமை என்றும் பஸ் சாரதி கூறியுள்ளார். இலங்கை வீரர்கள் அனைவரும் உயிர் தப்பியதற்கு கடவுளுக்கு நன்றி கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கனடாவிலுள்ள இலங்கையரை திருப்பி அனுப்ப வேண்டாம்!

## அந்நாட்டு எம்.பிக்கள் அரசிடம் கோரிக்கை

இலங்கைப் பிரஜைகளை நாடுகடத்தும் நடவடிக்கைகளை கைவிடுமாறு அந்த நாட்டு அரசைக் கேட்டுக்கொண்டுள்ள கனடாவின் நாடாளுமன்றக் குழு ''மக்களை மீண்டும் நாடு கடத்துவதற்கு இலங்கை உகந்த நாடல்ல, மிகவும் ஆபத்தானது'' என்றும் தெரிவித்துள்ளது. இது குறித்த பிரேரணையை முன்மொழிந்துள்ள கனடா வின் தாராளவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கர்கியானிஸ், இலங்கையில் நெருக்கடிகள் அதிகரிதுள்ளன என்றும் எச்சரித்துள்ளார்.

மேலும் இலங்கையர்களை பொறுப்பேற்கும் (Sponsor Ship) விண்ணப்பங்களை துரிதமாக பரிசீலிக்குமாறும் அவர் கோரியுள்ளார். இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வரும் விண்ணப்பங்களை ஆராய்வதற்கு இரண்டு வருடங்களுக்கு மேல் எடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கனடா 2007 இல் 50 பேரையும், 2008 இல் 61பேரையும் இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-சி)

# யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கு இடமில்லை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வையும் வழங்கி வருகின்றனர். சில சக்திகள் இதற்கு எதிராகச் செயற்படுகின்றன.

ஆனால் மக்களின் விருப்பத்துக்கு மாறாக நாம் செயற்படமாட்டோம். அந்த அடிப்படையில்தான் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் எமது படை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

மரணத்தின் இறுதித் தறுவாயில் இருக்கும் புலிகள் மிகக் கீழ்த்தரமாக செயற்படுகின்றனர். இந்த இறுதி நேரத்தில் கூட புலிகள் இந்த நாட்டுக்குப் பாரிய அழிவை ஏற்படுத்தலாம்.

புலிகளின் யுத்த விமானங்கள் எம்மால் அழிக்கப்பட்டதன் மூலம் புலியின் இறுதிச் சிறகும் உடைக்கப்பட்டுள்ளது.

புலிகள் மூவின மக்களுக்கும் தொல்லை கொடுக்கின்றனர். அரசு தமிழர்களைக் கொலை செய்கின்றது என்று புலிகள் சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்கின்றனர். அது முற்றிலும் பொய்யானது. மக்கள் மத்தியில் ஒளிந்துகொண்டுதான் புலிகள் இப்பிரசாரத்தை மேற்கொள்கின்றனர்.

தொண்டர் நிறுவனங்களுக்கு உண்மை தெரிந்தும் கண்மூடித்தனமாக அவை செயற்படுகின்றன. அந்நிறுவனங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பொய்ப்பிரசாரம் செய்கின்றன.

அரசு படுகுழியில் விழாது

இப்போது புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கோருகின்றனர். யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருந்தபோது அதைப் புலிகள் எத்தனை தடவைகள் மீறினர் என்று எமக்குத் தெரியும்.

யுத்தநிறுத்தத்தைப் பயன்படுத்தி அவர்கள் ஆயுதங்களைக் களஞ்சியப் படுத்தியிருந்தனர். அவற்றை எமது படையினர் கைப்பற்றினர். புலிகள் பலவீனமடையும் போதெல்லாம் இவ்வாறு யுத்தநிறுத்தத்தைக் கோருவது சாதாரண ஒன்று.

புலிகளின் சுபாவத்தை உணர்ந்து அரசு யுத்தநிறுத்தம் ஒன்றுக்குச் சென்று மீண்டும் படுகுழியில் விழாது. யுத்தநிறுத்தம் ஒன்றுக்குச் சாத்தியமே இல்லை.

புலிகளை யுத்தம் மூலம் தோற்கடிக்கும் பொறுப்பைப் படையினரிடம் ஒப்படைத்து விட்டு நாம் அமைதியாக இருக்க முடியாது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படவேண்டும்.

30 வருடங்களாக வேரூன்றிப் போயுள்ள பயங்கரவாதத்தை நாளையோ, [illegible] அல்லது இன்னும் [illegible]லோ முற்றாக ஒழித்துவிட முடியும் - என்றார். (அ-சி)

### கல்வியற் கல்லூரி கொடுப்பனவு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான பெப்ர வரி மாதக் கொடுப்பனவு எதிர் வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் வழங்கப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவை பெற வரும் ஆசிரியர்கள் பயிற்சி சம்பந்தமான ஆவணங்களையும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் நடாத்தப்பட்ட கொடி தின விவரத்தினையும் சமர்ப்பிக்கும்படி கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர ..., யாழ்ப்பாணம்.



# தமிழகத்தில் திருமாவளவன் தலைமையில் ஆரம்பமானது 'நாம் தமிழர்' நடைபயணம்

சென்னை, மார்ச் 05

இலங்கையில் நடைபெற்றுவரும் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரியும், உடனடிப் போர்நிறுத்தத்தை வலியுறுத்தியும் கிராமம் கிராமாக மக்களை எழுச்சி பெற வைக்கும் விதமாக 'நாம் தமிழர்' நடைபயணப் போராட்டம் நேற்று தமிழகமெங்கும் ஒன்றியம் ஒன்றியமாக விடுதலைச் சிறுத்தைகளால் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மார்ச் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த ''நாம் தமிழர்'' நடைப்பயணம் பின்னர் மார்ச் 4, 5ஆம் திகதிகளில் நடைபெறும் என அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்திருந்தார்.



அதன்படி நேற்று புதன்கிழமை காஞ்சீபுரம் வாலாஜாபாத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தலைமையில், உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தனால் கொடி அசைத்துத் தொடக்கி வைக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்ட கிராமங்களில் பொது மக்களின் அமோக வரவேற்புடன் இப்போராட்டம் நடந்து வருகிறது.

நேற்று 20 கிலோ மீற்றர் நடக்கவிருந்த திருமாவளவன் மாலை காஞ்சீபுரத்தில் பொது கூட்டத்தில் உரையாற்றவிருந்தார்.

இன்று தொடர்ந்து 25 கிலோ மீற்றர் நடைபயணம் மேற்கொள்கிறார். இதன் மூலமாக ஒரு கோடி கிராம மக்களைச் சந்தித்து ஈழத்தில் நடக்கும் இன படுகொலைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவிருக்கிறார்.

# ஆசிரியைகளின் சங்கிலிகள் இனந் தெரியாதோரால் அறுப்பு

மந்திகை, மார்ச் 5

நெல்லியடி, கரவெட்டிப் பகுதியில் இரு ஆசிரியைகளின் சங்கிலிகள் இனந்தெரியாத நபர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

நெல்லியடி, மந்திகையைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் நேற்று முன்தினம் பணி முடிந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் அவரது சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி விட்டனர்.

அதே வேளை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியை ஒருவர் நேற்று பணி முடிந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதவர்கள் அவரது சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிவிட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நெல்லியடிப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-218)

# இலங்கை வீரர்கள் மீதான தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கண்டனம்

கொழும்பு, மார்ச் 5

பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானமை குறித்து அமெரிக்கஜனாதிபதி பராக் ஒபாமா கடும் கவலை வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் தொடர்ந்தும் பயங்கரவாதிகளின் புகலிடமாக விளங்குகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வெளிவிவகார அமைச்சும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்துள்ளது.

அப்பாவிப் பொதுமக்கள் மீதும் பாகிஸ்தான் - இலங்கை உறவுகள் மீதும் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலைத் தாம் கண்டிக்கிறார் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பிரதிப் பேச்சாளர் கோர்டென்டுர் கைட் தெரிவித்துள்ளார்.

''இது அமைதியான - இயல்பான - உறவுகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல். ஆகவே இதனைக் கடுமையாகக் கண்டிக்கிறோம்'' - என அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

# கதிர்காமம் வீதியில் ஊர்காவற் படையினர் இருவர் சூட்டுக்குப் பலி!

கொழும்பு, மார்ச் 05

புத்தல - கதிர்காமம் வீதியில் காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மற்றும் ஊர்காவற் படையினர் மீது நேற்றுக்காலை 9 மணியளவில் ஆயுதக்குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளதாகப் படைத்தரப் புச் செய்தி தெரிவித்தது.

இத்தாக்குதலில் ஊர்காவற்படையைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர் என்று அந் தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காட்டுப்பகுதியில் இருந்து வந்த ஆயுதக்குழுவினரே இத்தாக்குதலை நடத்தி னர். அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலை அடுத்து அவர்கள் காட்டுக்குள் திரும் பிச் சென்றனர் என்றும் படைத்தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடத் தினர் என்றும் கூறப்பட்டது. (அ-சி)




பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் நேற்று லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

# மின்வெட்டு நடைமுறைக்கு வராது அரசு நேற்று நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 05

எக் காரணம் கொண்டும் நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என மின்வலு, எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதைத் தெரிவித்தார்.

மின்சார உற்பத்தி நீர் நிலைகளில் வரட்சி காணப்படுகின்ற போதும் அரசு எக்காரணம் கொண்டும் மின்வெட்டை அமுல்படுத்தாது.

கடந்த சில நாள்களாக நாட்டின் சில பகுதிகளில் மின் வெட்டு ஏற்பட்டமைக்கு தொழில்நுட்பக் கோளாறே காரணம். அது மின்வெட்டு அல்ல என்றார் அமைச்சர்.

மின்சார உற்பத்தி நிலையங்களில் நீர் வற்றியுள்ளது. அவற்றை நிவர்த்தி செய்ய மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதைக் காரணம் காட்டி மின் வெட்டை நடைமுறைப்படுத்த எந்தவிதத் தீர்மானமும் மேற்கொள்ளப்பட வில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ-சி)

## இலங்கையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்துக்கு முன்பாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு என்ற அமைப்பு செய்திருந்தது.

தமது தொகுதி மக்களின் உறவினர்கள் இலங்கையில் இன்னல்களைச் சந்திப்பதனாலேயே, அவர்களுக்காகக் குரல் கொடுக்கத்தான் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோம் என பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவோன் மக்டொனா தெரிவித்தார்.

மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருக்கின்ற இந்த பொதுநலவாய அமைச்சர்கள் மட்ட செயலணிக்குழு உறுப்பினர்கள், பொதுநலவாய நாடுகள் எங்கிலும் மனித உரிமை நிலைவரங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று என்பீல்ட் வடக்குப் பகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் ரையன் கூறினார். (அ-சி)

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் 55 ஆவது படைப் பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் இரு தரப்புக்கும் இழப்புகள் ஏற்பட்டன. இச்சண்டையின் பின்னர் விடுதலைப் புலிகளின் மூன்று சடலங்கள் படையினரால் மீட்கப்பட்டன என்று அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பற்றிக்குளம் பகுதியில் காலை 9.45 மணியளவிலும், மாலை 5.30 மணியளவிலும் இடம்பெற்ற மோதல்களில் படைத்தரப்புக்கு சிறிதளவு இழப்பு ஏற்பட்டது என்று ஊடக மத்திய நிலையம் அறிவித்தது.

அதேவேளை, விசுவமடுப் பகுதியில் நிலைகொண்டிருந்த 57ஆவது படைப் பிரிவின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படைத்தரப்புக்கு சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் அந்த நிலையம் தெரிவிக்கிறது.

நேற்று முன்தினம் புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளுக்கு இழப்புகள் ஏற்பட்டன என்றும் படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. (அ-சி)

**Bsc காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

- பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
- BA* தமிழ், வரலாறு, ஆங்கிலம், அரசியல், பொருளியல், Social Science ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்ய முடியும்.
- B.Comக் குரிய பதிவுகளும் நடைபெறுகின்றன.

குறிப்பு: 1. இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவை ஆகும்.
2. பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.

இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை),
தொ.பே: 222 8148, 222 3208.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

## திருமாவளவன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து புளியந்தோப்பு பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## 'உதயன்' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'உதயன்' , 'சுடர் ஒளி' ஆசிரியர் வித்தியாதரன் கடத்தப்பட்டார் என்று முதலில் செய்திகள் வெளிவந்தன. ஆனால், பின்னர் அவர் கைது செய்யப்பட்டார் என்று அரசு அறிவித்தது.

கைது செய்வது இப்படித்தானா? ஒருவரைக் கைது செய்வதென்றால் அதற்கு ஒழுங்குமுறை இருக்கிறது. கைது செய்ய வருபவர்கள் முதலில் தம்மை அடையாளம் காட்டி, கைது செய்வதற்கான காரணத்தையும் கூறவேண்டும். ஆனால் வெள்ளை வானில் சென்று கடத்தல் பாணியில் இழுத்துச் சென்று விட்டு, பின்னர் கைது என்று கூறுவது ஏற்க முடியாதது.

வித்தியாதரனுக்கு புலிகளுடன் தொடர்பு இருந்தால் அது குறித்து உரிய முறையில் விசாரிக்கலாம். ஆனால் அதற்காக சட்டத்துக்கு மாறாக அவரைக் கைது செய்து இழுத்துச் செல்வது முறையல்ல. அரசு காட்டுச்சட்டம் நடத்துகின்றது போலிருக்கிறது.

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய ஊடகத்துறை அமைச்சரே வித்தியாதரன் கைது செய்யப்பட்ட முறையை நியாயப்படுத்தியுள்ளார். இதன் மூலம், வெள்ளை வான் சம்பவங்களை அரசு ஏற்றுக்கொள்கின்றது என்ற கருத்து வெளிப்படையாகின்றது - என்று தெரிவித்தார். (அ-சி)

## மனிதாபிமானப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களினால் சிறுவர்கள் மரணமடைந்துள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் மனிதாபிமான பேரவலத்தை கட்டவிழ்த்து விடும் நிலையைத் தோற்றிவித்துள்ளது.

இத்தகைய பேரவலத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் பொதுமக்கள் அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறுவதைத் தடுப்பதை நிறுத்த வேண்டும்-இவ்வாறு கோர்டன் வைஸ் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவைச் சேர்ந்த ஜக்குவஸ் டி மையோ, முல்லைத்தீவு நிலைமை குறித்துத் தெரிவித்ததாவது:-

பொதுமக்களைப் பாரியளவில் வெளியேற்றுவதற்கும் வன்னிக்கு நிவாரண உதவிகள் செல்வதற்கும் அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வன்னியில் தற்போது நிகழும் தேவையற்ற மரணங்களையும் துயரங்களையும் இலகுவாகத் தவிர்க்கலாம். அதற்குப் பொதுமக்களை உடனடியாக வெளியேற்றுவதற்கான அனுமதி கிடைக்க வேண்டும்.

மோதல் இடம்பெறும் பகுதிகளுக்கு குறிப்பிடத்தக்க அர்த்தமுள்ள மனிதாபிமான உதவியை அனுப்புவது சாத்தியம்.

ஓரளவு மனிதாபிமான உதவிகள் சென்றுள்ளன. எனினும், அரசு அவர்களுக்குத் தேவையானஅளவை விடக் குறைந்தளவு நிவாரணப் பொருள்களையே அனுமதித்துள்ளது.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றுவதில் நாங்கள் தர்மசங்கடமான நிலையை எதிர்கொள்கிறோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.